பக்கங்கள்-16 | 13,ஆணி.2021 | விலை-30.00




# தினப்புயல்

PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -348

## இலங்கை திருநாட்டை ஜனாதிபதி ,CID,TID,NIB இராணுவபுலனாய்வாளரிடம் ஒப்படைக்க வேண்டும்




## சீன ஆய்வகத்தில் உருவாக்கப்பட்ட உயிரியல் ஆயுதமே கொரோனா வைரஸ்!




## தீப்பற்றி எரிந்த கப்பலும் மிக மோசமான பேரழிவை சந்தித்துள்ள சமுத்திரமும்



-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# இலங்கை திருநாட்டை ஜனாதிபதி CID,TID,NIB இராணுவ புலனாய்வாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும் இல்லையேல் ஆபத்து

இலங்கை திருநாட்டில் அண்மைக்காலமாக அந்நிய நாடுகளின் தலையீடு என்பது அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. கொரோனா வைரஸின் தாக்கம் ஒருபுறத்திலிருந்தாலும் மறுபுறத்தில் அபிவிருத்தியடைந்த நாடுகள் தமது சுயலாப அரசியலுக்காக நாட்டை கூறுபோடுகின்ற நடவடிக்கைகளில் களமிறங்கியிருக்கின்றார்கள். அந்நிய நாடுகளின் தலையீடு இந்த இலங்கைத்தீவிலிருந்து என்று அப்புறப்படுத்தப்படுகின்றதோ அன்று தான் நமக்கான தீர்வு திட்டத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.

குறிப்பாக இந்த நாட்டின் அரசியல் கட்சிகள் தமிழீழ விடுதலைப்புலிகளையும் தமிழ் மக்களையும் அழித்தொழிக்கும் ஒரு சிந்தனை கொண்டே கடந்த காலங்களில் செயற்பட்டன. இதனால் இந்த நாட்டில் அந்நிய படையினரின் ஊடுறுவலை தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. ஒரு நாட்டின் பாதுகாப்பை தக்கவைத்துக்கொள்வதன் ஊடாகவே அந்த நாட்டின் அடுத்தக்கட்ட அரசியல் கட்டமைப்பை முன்னகர்த்தி செல்லமுடியும். டட்லி சேனாநாயக்க தொடக்கம் கோட்டபாய ராஜபக்ச வரையிலான அனைவருமே இந்த நாட்டில் இனவாத அரசியலையே மேற்கொண்டுவந்தனர். இதற்கு பல சான்றுகளும் இருக்கின்றன. இவ் விடயங்கள் அனைவரும் அறிந்ததே. இதிலிருந்து நாம் கற்றுக்கொண்ட பாடங்களாக பல விடயங்கள் இருக்கின்றன. இருப்பினும் உலகம் எங்கும் கொடிய கொரோனா வைரஸின் தாக்கம் இதனால் பல இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழப்பு குறிப்பாக இலங்கையின் மரண வீதங்களும் பாதிக்கப்பட்டோர் வீதங்களும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. தற்பொழுது சராசரியாக நாள் ஒன்றுக்கு 60 என்ற ரீதியில் மரணங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

இது இலங்கையின் சனத்தொகையில் பார்க்கும் பொழுது கூடுதலாகவே அமையப்பெறுகின்றது. இதைவிட நூற்றுக்கணக்கான மரணங்கள் நாட்டில் சாதாரணமாக நிகழ்கின்றவை. விபத்து, வன்முறை, சாதாரண மரணங்கள் என்று வகைப்படுத்தலாம். இந்த நிலைமைகளில் தான் சீனா அரசாங்கமானது ஆசிய பிராந்தியத்தில் தன்னையொரு வலுவான நாடாக மாற்றிக்கொள்வதற்கு தனது புலனாய்வு கட்டமைப்பை இலங்கையில் வலுவாக கட்டவிழ்த்துவிட்டுள்ளது. அது எவ்வாறெனின் இலங்கையில் தமிழ் சிங்கள மொழியை கற்கும் மாணவர்களாகவும் தனது சீன தூதரகத்தை நிறுவி அதனோடு பல உளவு நடவடிக்கைகளையும், வியாபார ரீதியிலான உளவு நடவடிக்கைகளையும் பொருளாதார ரீதியாக மறுமுனையில் இலங்கை மீது கடன் சுமையை திணித்து அதனூடாக தனது அரசியல் தந்திர நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருகின்றது. இதனை இலங்கையின் ஜனாதிபதியினாலோ அல்லது பிரதமராலோ அமைச்சர்களினாலோ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியாது. அந்நிய நாட்டினுடைய அபகரிப்புக்கள் தொடர்பில் புதிதான சட்டங்கள் நிறுவப்பட்டு இலங்கைக்கு வருகின்ற உல்லாச பயணிகளின் வருகையை மட்டுப்படுத்த வேண்டும். அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலும் இதனையே செய்துவருகின்றன.

ஆனால் இலங்கையில் மட்டும் அனைத்து அதிகாரங்களையும் ஜனாதிபதி தம்வசம் கொண்டிருப்பது என்பது தனது பரம்பரை அரசியலை இந்த நாட்டில் நிலைநிறுத்துவதற்கான செயற்பாடாகும். நாட்டின் மீது அக்கறையுடன் செயற்படுகின்ற ஜனாதிபதியாக இருந்தால் இந்த நாட்டின் கடன் சுமையை முதலாவதாக குறைக்க வேண்டும். ஒரு கொரோனா வைரஸை பரப்பிய சீன நாட்டுடன் நட்புறவை தொடர்ந்து பேணுவது என்பது இலங்கை தீவை அணுஆயுத முறை கொண்டும்கூட அழித்துவிட முடியும். 200 நாடுகளுக்கு கொரோனா வைரஸை பரப்பிய சீன நாட்டிற்கு இதுவொரு சாதாரணமான விடயமாகும். இவ்வாறான செயற்பாடுகளை சீன அரசாங்கம் விளைவிக்கின்றது என்று தெரிந்தும் அதனுடன் நட்புறவை ஏற்படுத்தும் ஜனாதிபதி அவர்கள் சற்று சிந்திக்க வேண்டும். அனைத்து செயற்பாடுகளையும் தாங்களே முன்னின்று செய்துவிட முடியாது. உதாரணமாக தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் கடல், வான், தரை என 54 கட்டமைப்புக்களை தமது அரசியல் ரீதியாக கொண்டிருந்தார். அதில் ஆய்வுப்பகுதியும் பொருண்ணியப் பகுதியும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கும் அந்நிய நாடுகளின் ஊடுறுவலை தடுப்பதற்குமான பொருட்களுடாக வைரசுகளை அனுப்பி ஒரு நாட்டை குட்டிச்சுவராக்குகின்ற தன்மையை இல்லாதொழிக்கும் செயற்பாடுகளுக்காகவே இந்த இரண்டு அமைப்புகளும் நிறுவப்பட்டது. அதைவிடவும் விடுதலைப்புலிகளினுடைய புலனாய்வு கட்டமைப்பு என்பது தலைசிறந்தது (டெசி). அந்த கட்டமைப்பினூடாக வடகிழக்கு பிரதேசத்தினூடாக தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தனர். சர்வதேச கடற்பரப்பை தவிர கடல், வான், தரை என இலங்கையின் பகுதிகளை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். அப்பொழுது எந்த அந்நிய சக்திகளும் இந்த நாட்டுக்குள் ஊடுறுவவில்லை. இவ்வாறு ஒரு வலிமை கொண்ட அணியாக விடுதலைப்புலிகள் திகழ்ந்ததன் நிமிர்த்தம் இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் சர்வதேச ரீதியாக இலங்கையுடனான நட்புறவை பேணிக்கொள்ள முடியாத சூழல் இறுக்கமாக உருவாக்கப்பட தமிழினத்தின் விடுதலைக்காக வடகிழக்கிணைந்த தமிழர் தாயகம் கேட்டு போராடிய தமிழீழ விடுதலைப்புலிகளை அழித்தொழிக்க வேண்டும் என்று இந்த மூன்று நாடுகளும் திடசங்கற்பம் பூண்டன. அவர்களுடன் 34 நாடுகளும் கைகோர்த்துக்கொண்டன. அதனுடைய தாக்கங்களே மாவிலாறிலிருந்து ஆரம்பித்த போர் முள்ளிவாய்க்காலில் முடிவுற்றது. அதற்கு பின்னரான நடவடிக்கைகள் என்பது இந்தியா, சீனா, அமெரிக்கா இந்த நாடுகள் எவ்வாறு இலங்கைத்தீவில் தமது இருப்பை தக்கவைத்துக்கொள்வது என்ற போட்டி உருவாகியது. அதில் அமெரிக்கா, இந்தியாவை விட சீனா முந்திக்கொண்டது. கடன் சுமையை இலங்கையின் மீது திணித்து இலங்கையின் துறைமுகப் பகுதியையும் அம்பாந்தோட்டை துறைமுகப்பகுதியையும் தன்வசப்படுத்திக்கொண்டது. வியாபார ரீதியாக தனது இருப்பை உறுதிப்படுத்திக்கொண்ட சீனா மகிந்த ராஜபக்ச குடும்பத்துடன் தனது நட்புறவை தொடர்ந்தும் பேணிக்கொண்டது. ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஆட்சியில் எதனையுமே தம்மால் சாதிக்க முடியாது என்பதனை உணர்ந்துகொண்ட சீனா தேர்தலில் போட்டியிட்டு வெல்வதற்கு பெருந்தொகை பணத்தை மகிந்த குடும்பத்திற்கு வழங்கியது. அதிலொரு கட்டமாகவே இவர்களின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டது. ஆகவே செய்ந்நன்றி மறவாது இன்றுவரை கோட்டபாய ராஜபக்ச தலைமையிலான இந்த அரசாங்கம் தமது முழு ஆதரவையும் சீன அரசாங்கத்திற்கு வழங்கியுள்ளது.






## எவ்வாறு சீன அரசாங்கத்தினுடைய ஆக்கிரமிப்பிலிருந்து இலங்கை மீள்வது?

குறிப்பாக பார்த்தால் அபிவிருத்தியடைந்த நாடுகளின் புலனாய்வு கட்டமைப்பு என்பது குறிப்பாக அமெரிக்கா, பிரான்ஸ், லண்டன், கனடா, ஸ்கொட்லான்ட், இஸ்ரேல் போன்ற பல நாடுகள் தமது புலனாய்வு கட்டமைப்பை வலுவாக வளப்படுத்தியுள்ளனர். இந்த புலனாய்வு கட்டமைப்பே குறித்த நாட்டை ஆட்சி செய்கின்றது. ஜனாதிபதி, பிரதமர் போன்றனர் இந்த நாட்டில் ஒரு பொம்மைகளாகவே செயற்படுவர். குறித்த புலனாய்வு கட்டமைப்பினுடைய இறுக்கமான நடவடிக்கைகளினால் அந்த நாடு வருகின்ற சவால்களுக்கு முகங்கொடுத்து தன்னை இன்னமும் உலக வரலாற்றில் தன்னிறைவு பொருளாதாரம் கொண்ட நாடுகளாக வலப்படுத்திக்கொண்டிருக்கின்றன. அதுபோன்று இலங்கையிலும் **TID, CID,NIB,** இராணுவ புலனாய்வு கட்டமைப்பு **(Milry** இன்ரஜிலியன்ட்) இவர்கள் கூட்டிணைந்த ஒரு பாதுகாப்பு பொறுப்பை அதாவது முழு அதிகாரத்தையும் வழங்குவதன் ஊடாக இந்த நாட்டில் ஊடுறுவியுள்ள அந்நிய நாட்டின் சக்திகளை அடியோடு வேறறுக்க முடியும். மதவாதிகளாகவும், அரசியல்வாதிகளாகவும், தொழில் அதிபர்களாகவும், நிறுவனங்கள் ஊடாகவும், மிசனரிகள் ஊடாகவும் இந்த நாட்டில் குறித்த நாடுகளின் புலனாய்வு கட்டமைப்புக்கள் இயங்கிவருகின்றன. இவர்கள் தமது இலக்கை அடையும் வரையிலும் தமது புலனாய்வு நடவடிக்கைகளின் மூலம் இந்த நாட்டுக்குள் தமது சுயலாப அரசியலை செய்துகொண்டே இருப்பார்கள்.

குறிப்பாக கடல் மார்க்கமாக எமது பாதுகாப்பை பலப்படுத்த வேண்டிய தேவை கூடுதலாக உள்ளது. 65 ஆயிரத்து 610 சதுர கிலோமீற்றர்களை கொண்ட இலங்கைத்தீவை கடல் ரீதியாக பாதுகாத்துக்கொள்ளவேண்டிய தேவையிருக்கிறது. இதனூடாகவே பல போதைப்பொருட்களும் இரசாயனப்பொருட்களும் இலங்கைக்கு வந்தடைகின்றன. இலங்கையின் கடற்படையினர் குறித்த வியாபாரத்துடன் தொடர்புடையவர்களாகவே இருக்கின்றனர். **TID,CID,NIB,** பொலிஸ் உத்தியோகத்தர் இராணுவவீரர்களை விட இவர்களின் சொத்துக்களை எடுத்துக்கொண்டால் கோடிக்கணக்கில் சம்பாதித்துள்ளார்கள். அது எவ்வாறு சாத்தியம் என்றும் பார்ப்போமாக இருந்தால் குறுக்கு வழியில் சம்பாதிக்கப்பட்டதாகவே இருக்கின்றது.

ஆகவே இலங்கையின் புலனாய்வு கட்டமைப்புகளுக்கு உரிய அதிகாரங்களை வழங்கவும் இந்தியா, சீனா, அமெரிக்காவினுடைய அதிதீவிர ஆதிக்கத்திலிருந்து இந்த நாட்டை பாதுகாத்துக்கொள்ள முடியும். உள்ளூர் பிரச்சனைக்கான தீர்வை நாம் அரசியல் ரீதியாக தீர்த்துக்கொள்ளும் சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்தமுடியும். இந்த நாட்டின் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்களுக்கு இந்த கட்டுரையின் ஊடாக நாம் விரயமாக கேட்டுக்கொள்ளும் விடயம் என்னவென்றால் அந்நிய நாட்டின் ஆக்கிரமிப்பிலிருந்து வெளியிடுவதற்கான ஒரு நடவடிக்கையாகவே இதனை நாம் கருதுகின்றோம். ஒப்பீட்டு ரீதியாக பார்க்குமிடத்தில் அபிவிருத்தியடைந்த நாடுகளின் வரலாறுகள் அவர்களுடைய புலனாய்வு கட்டமைப்புகளின் ஊடாகவே வளர்ச்சி கண்டன. தன்னிறைவு பொருளாதாரத்தில் வளர்ச்சி பெற வேண்டும் என நீங்கள் எடுத்திருக்கும் முயற்சி பாராட்டத்தக்கது, விவசாய ஊக்குவிப்பு போன்ற விடயங்களும் பாராட்டத்தக்கது. ஆனால் எமது நாட்டை ஒரு வைரஸ் கொண்டு தாக்கியழிக்கின்ற அல்லது பணத்தை கொடுத்து எம்மை விலைக்கு வாங்குகின்ற ஒரு நடவடிக்கையை சீன அரசு தற்பொழுது மேற்கொண்டுவருகின்றது. இதனை தடுத்து நிறுத்துவதற்காக புலனாய்வாளர்களின் கையில் இந்த நாட்டை இந்த நாட்டின் புலனாய்வு நடவடிக்கைகளை பூரண சுதந்திரத்துடன் செயற்படுத்த அனுமதியளியுங்கள்.

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கிவிட்டு தீவிரவாத தடைச்சட்டத்தை அமுல்படுத்துங்கள்

இன்று இலங்கைத்தீவில் 30 வருடகால யுத்தம் நடைபெற்று முடிந்து 11 ஆண்டுகள் வரை கடந்துள்ள நிலையில் தொடர்ந்தும் பயங்கரவாத தடைச்சட்டத்தை இந்த நாட்டில் அரசாங்கம் வேண்டும் என்றே திணித்துள்ளது. ஒரு இனத்தின் விடுதலைக்காக போராடிய தமிழீழ விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகளல்ல. குறிப்பாக விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் அரச தரப்பு உள்ளூர் பேச்சுவார்த்தைகளாக 14 பேச்சுவார்த்தைகளும், சர்வதேச பேச்சுவார்த்தைகளாக 7 பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்று முடிந்தது. 1995ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் பிரபாகரன் மற்றும் சந்திரிகா பண்டாரநாயக்கா இருவருக்குமிடையில் கடித பரிமாற்றம் கூட இடம்பெற்றுள்ளது. பிரேமதாஸ காலத்தில் இந்திய இராணுவத்தை இலங்கையில் இருந்து விரட்டியடிப்பதற்கு 5000க்கும் மேற்பட்ட AK - 47 துப்பாக்கிகள், வாகனங்கள், மருந்துகள், நிதி போன்றவை விடுதலைப்புலிகளிடம் வழங்கப்பட்டு இந்திய அரசிற்கு எதிராக இலங்கையில் போர் இடம்பெற்றது. அப்பொழுதெல்லாம் தமிழீழ விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் என்று அரசாங்கத்தின் கண்களுக்கு தெரியவில்லையா? குறிப்பாக இந்தியா, சீனா,அமெரிக்கா நாடுகளின் ஏகாதிபத்திய நடவடிக்கைகளுக்கும் ஆசிய, பசுபிக் பிராந்தியத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் பாரிய சிக்கல்களை உருவாக்குவார்கள் என்ற காரணத்தினாலும் இலங்கை மீது எந்தவொரு நாடுகளும் அத்துமீறல்களை மேற்கொள்ள முடியாது என்ற காரணத்தாலும் இவை குறித்த நாடுகளுக்கு பாதக தன்மையை ஏற்படுத்தும் என்ற வகையிலே விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என முத்திரை குத்தியது இலங்கை அரசு. இதன் முழுமையான ஏற்பாட்டாளராக சந்திரிகாவும் முன்னாள் மறைந்த வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரும் இருக்கின்றனர். இவர் ஒரு தமிழனாக இருந்தும் தமிழின துரோகியாகவே செயற்பாட்டார். இந்தியா இலங்கையை ஆக்கிரமிக்க போகின்றது என்ற காரணத்தினால் இந்தியாவிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக் குமிடையிலும் பகைமையை உருவாக்கி போரிட வைத்தது இலங்கை அரசு. இது அனைவரும் அறிந்த உண்மையே. இந்த கட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என்றும், தீவிரவாதிகள் என்றும் கூறுவது ஏற்றுக்கொள்ளமுடியாது. இருந்தும் தானே ராஜா, தானே மந்திரி என்று இலங்கை அரசு செயற்படுகின்றது. தற்பொழுது நாடு அபாயகரமான சூழலுக்குள் சென்றுகொண்டிருக்கின்றது. இலங்கையில் சீன நாட்டின் ஊடுறுவல் என்பது பாரிய தாக்கத்தை உருவாக்கியுள்ளது. கொரோனா வைரஸை பரப்பிய சீனாவை நாம் ஆதரிக்க வேண்டிய தேவையில்லை. அவர்களே அரச தீவிரவாதிகளாக செயற்படுகின்றார்கள்.

ஆகவே அவர்களின் தலையீட்டை இல்லாதொழிக்கும் செயற்பாடுகளில் நாம் தீவிரம் காட்ட வேண்டும். குறிப்பாக எந்த நாட்டின் ஊடுறுவலும் இலங்கைக்கு தேவையற்றதொன்று. விடுதலைப்புலிகளை வைத்து அரசியல் செய்யும் கோளைத்தனமான அரசியலை அரசு கைவிட வேண்டும். சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம் என்ற யதார்த்தத்தை புரிந்துகொண்டு நாட்டின் ஜனாதிபதி அவர்கள் துரித கதியில் செயற்பட வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு பதிலாக தீவிரவாத தடைச்சட்டத்தை உருவாக்கி அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். 48 நாடுகளில் தீவிரவாத அமைப்புக்கள் இருக்கின்றன, அல்-கைதா, லக்ஸ்சரிதெளபா, ஹமாஸ், இந்தியாவின் நஸ்லைட் இவை அனைத்தும் பிரதான இடத்தை பிடித்த தீவிரவாத அமைப்புகளாகும். ஆகவே யதார்த்தத்தை புரிந்துகொண்டு செயற்பட்டால் மட்டுமே இந்த நாட்டை பேராபத்தில் இருந்து காப்பாற்றிக்கொள்ள முடியும்.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

**151**

சூரியன் மறையும் நேரத் தில் (மாலைக் கருக்கற் பொழுதில்) குழுவின் கட்டளையாளன் அந்த இடத்தில் வைத்துக் கெரில்லாக்களுக்கு பணிகளை வழங்கலாம். எதிரியின் மிக முக்கியமான இலக்குகளையும் அவற்றை நெருங்குவதற்கான பாதைகளையும் காட்டலாம். தாக்குதலுக்கான நேரத்தையும் நியமிக்கலாம்.



இரவின் ஆரம்பப் பொழுதில் நடவடிக்கையை மேற்கொள்கின்ற போது, கெரில்லாக்கள் பின்வாங்கிச் செல்வதற்கான நேரம் கூடுதலானதாகின்றது.

இலக்குகள் மீது திடீரத் தாக்குதலுக்காக ஒழுங்குபடுத்தல்

எதிரியின் முக்கிய இலக்குமீது தாக்குதலுக்குத் தயார்ப்படுத்தும் போது, கட்டளையாளன் அவசியம் அதனை வேவு பார்க்க ஒழுங்குபடுத்த வேண்டும். இதற்காக அனுபவமுள்ள கெரில்லாஒருவனைப்பயன்படுத்துவது மிகப் பொருத்தமானதாகும். இலக்கிலுள்ள காவலர்களுடன் தொடர் பேற்படுத்துவதற்கு இலகுவாகவிருக்கும் வகையில் அவனுக்கு நல்லதொரு “மறைப்புக்கதை” தயார்ப்படுத்தப்பட வேண்டும்.

காவலாளிகள் இருக்கின்ற இடங்கள், அவர்கள் கொண்டிருக்கின்ற ஆயுதங்கள் போன்றவற்றைப் பற்றி வேவுக்காரன் அவசியம் கண்டறிய வேண்டும். காவலாளர்களுக்குச் சந்தேகம் வராதவண்ணம் அவனது செயற்பாடுகள் இருக்க வேண்டும். அதிகமாக அறியும் ஆவல் எதிரியை எச்சரிக்கையடையச் செய்துவிடலாம். காவலாளர்களின் நிலைகள் இருக்கின்ற இடத்தில் அல்லது இலக்கிற்கு அருகில் (இலக்கினுள்) அதிக நேரம் தங்கிநிற்பது கூடாது.

இலக்கினுள் பணியாற்றுகின்ற ஆட்களிடமிருந்து அல்லது கெரில்லாக்களின் நடவடிக்கையால் பய முற்றிருக்கின்ற காவல் நிலையிலுள்ள சிப்பாய்களிடமிருந்து முக்கிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

காவலாளர்களின் எண்ணிக்கை, அவனது ஆயுதங்கள் ஆகியனவற்றைத் தவிர, மிக முக்கியமாக எவ்வாறு காவல் பலப்படுத்தல் ஒழுங்கு படுத்தப்படுகின்றது, ஆயுதங்களும் வெடிபொருட்களும் சேமித்து வைக்கப்பட்டுள்ள இடம், ஒவ்வொரு காவல் நிலையும் அமைந்துள்ள இடம் போன்றவற்றைப் பற்றியும் அறிய வேண்டும்.

எதிரியின் இலக்கினுள் நுழைந்து வேவெடுப்பதைத் தவிர, வேவுக்காரன் பகலிலும் இரவிலும் தொலைவில் இருந்தவாறு இலக்கை அவதானித்தும் அதனைப் பற்றி அறிந்துகொள்கின்றான். இவ்வாறான அவதானிப்பின்மூலம்திருத்தவேலைத் தளங்கள், கெரில்லாக்கள் அக்கறை கொண்டுள்ள ஏனைய இலக்குகள் அமைந்துள்ள இடங்கள் (இரவில் இவ்விடங்களில் காணப்படும் வெளிச்சத்தைக்கொண்டு), காவல் நிலையிலுள்ள காவலர்களின் பண்பு, அவர்கள் மாற்றப்படும் ஒழுங்கும் நேரமும், ரோந்து அணியின் தங்குமிடம், எவ்வாறு (விழிப்புணர்ச்சியுடனா) காவலர்கள் காவல் காக்கின்றனர் (குளிர்காலத்தில் மற்றும் வெயில் காலத்தில்) ஆகியவற்றைக் கண்டுகொள்ளலாம்.

வேவுத் தகவல்கள் நடவடிக்கைத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன.

வேவுத் தகவல்களைக் கற்றறிந்தபின், குழுக் கட்டளையாளன் எப்பொழுது, எப்படி எவ்வாறான படைகளுடன் இலக்கைத் தாக்குவது என்ற தீர்மானத்தை எடுக்கின்றான். இப்பணியை நிறைவேற்றுவதற்காகக் கெரில்லாக் குழுக்களில் வழக்கமாக மூன்று உப குழுக்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.

முதலாவதுகாவலாளர்களைத் தாக்குகின்ற உபகுழு: இக்குழு இலகு தன்னியக்கச் சுடுகலன்கள் அல்லது அரைத் தன்னியக்கச் சுடுகலன்கள், குத்துவாள்கள், கத்தி போன்றவற்றை ஆயுதமாகத் தோற்றுவிக்கப்படுகின்றன.

இரண்டாவது - பிரதான உபகுழு: குறித்த இலக்கினுள் செயற்படுவதற்காக இக்குழு நியமிக்கப்படுகின்றது. இது தகர்ப்புக்களையும் தீயிடல்களையும் அழிவு வேலைகளையும் மேற்கொள்கின்றது.. தனது பணிக்குப் பொருத்தமான ஆயுதங்களையும் தகர்ப்பு வேலைக்கான வெடிபொருட்களையும் இக்குழு கொண்டிருக்கின்றது.

மூன்றாவது - காப்பளிக்கின்ற உபகுழு:இக்குழு இலக்கிற்கு வருகின்ற வீதிகள், அவற்றிற்கான ஏனைய பாதைகள் போன்றவற்றைக் கட்டுப் பாட்டில் வைத்திருக்கின்றதுடன், எதிரியின் உதவிப்படை வருகின்றபோது, அதனை ஏனைய உபகுழுக்களுக்கும் (கட்டளையாளர்களுக்கு) தெரியப்படுத்துகின்றது. உதவிக்கு வருகின்ற உதவிப்படை இலக்கினுள் இருக்கின்ற எதிரியுடன் சேர்ந்துகொள்ள அனுமதிக்காமல், இக்குழு அவர்களுடன் சமரிடுகின்றது. ஏனைய குழுக்கள் பின் வாங்குவதற்குரிய காப்பளிப்பையும் இக்குழுவே வழங்குகின்றது. இது தன்னியக்கச் சுடுகலன்களையும் கையெறிகுண்டுகளையும் ஆயுதமாகத் தரித்துள்ளது.

தாக்குகின்ற உபகுழு சந்தடியின்றிக் காவலாளர்களைக் களைந்துவிட்ட சமயங்களில், அது காப்பளிக்கின்ற உபகுழுவின் பணிகளையும் நிறைவேற்றுகின்றது.

சிறிய காவல் நிலைகளைத் (முகாம்களைத்) தாக்குதல்

எதிரியின் சிறிய காவல் நிலைகள் என்பதற்குள் (முகாம்களுக்குள்) தொலைபேசி, வானொலி நிலையங்கள், அவற்றின் தனியான நிலைகள் போன்றன உள்ளடக்கப்படுகின்றன.

இவ்வாறான செயற்பாடுகளின் போது, கெரில்லாக்கள் பின்வரும் குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றனர்:

தாக்குதல் குழு: இக்குழு தாக்குதல் மற்றும் பாதுகாப்பு என ,ரு உப குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றது. நடுவக நிலையத்துடனான தொடர்புக் கோபுரங்களை அழித்தல், நிலைகளைக் கட்டுப்படுத்தல், இலக்குகளுக்குக் கண்ணி வைக்கப்பட்டிருந்தால் அவற்றைச் செயலிழக்கச் செய்தல் போன்ற பணிகளுக்காகப் பாதுகாப்பு உபகுழு நியமிக்கப்படுகின்றது.

நாசகாரவேலைக் குழு: காவல் நிலைகளை (முகாம்களிலுள்ள நிலைகளை) அழித்தல், அவற்றைத் தீயிடல் போன்ற பணிகளை மேற்கொள்கின்றது.

ஆயுதங்கள், வெடிபொருட்கள், ஆடைகள், உணவுப் பொருட்கள் போன்றவற்றைச் சேகரிக்கும் குழு: இக்குழுவே தொடர்புச் சாதனங்களையும் (தொலைபேசி உபகரணம், கடத்திகள், வானொலிக் கருவிகள்) சேகரிக்கின்றது. எடுத்துச்செல்ல வசதியற்ற பொருட்களனைத்தும் அழிக்கப்டுகின்றன. சாத்தியத்தைப் பொறுத்து, இக்குழுவில் வானொலி நிபுணர்களையும் சேர்த்துக்கொள்ளலாம்.

**நெற்றிபொறியன்**
**தொடர்வான்...**

# முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஒரு குள்ளநரி பாராளுமன்ற மீள் வருகை ஆபத்தானது

இன்றைய அரசியல் சூழ்நிலையில் அதிகரித்து வருகின்ற கொரோனா வைரசின் தாக்கம் ஒருபுறமிருக்க சீனா ஆக்கிரமிப்பு மறுபக்கத்திலிருக்க இலங்கை நாடு துண்டாடப்படுகின்ற ஒரு சூழலுக்குள் தள்ளப்பட்டிருக்கின்றது. இதிலிருந்து நாட்டு மக்களை காப்பாற்றுவது யார்? என்ற கேள்விக்கு விடையாக முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்களை களமிறக்குவதற்கு சிங்கள அரசியல் தலைமைகள் பலரும் முயற்சிக்கின்றனர். இவர் 3 தடவைகள் பிரதமராக இருந்தும் இடைக்கால நிர்வாகம், பேச்சுவார்த்தைகள் என நாட்களையும் காலங்களையும் வீணடித்து தமிழ் மக்களுக்கான வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை தருகின்றேன் என போலி பரப்புரை செய்து ஏமாற்றத்திற்கு மேல் ஏமாற்றத்தை கொடுத்தவர். விடுதலைப்புலிகளின் பிளவுக்கு மிக முக்கியமான சூத்திரதாரியாக செயற்பட்ட முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க விடுதலைப்புலிகளை ஆயுத முனை கொண்டு கருணா இருக்கும் வரை அழித்துவிட முடியாது என்ற நிலைப்பாட்டை கொண்டிருந்தார்.

ஆகவே எப்படியாவது பிரபாகரனிடத்திலிருந்து கருணாவை பிளவுபடுத்துவதனூடாகவே விடுதலைப்புலிகள் அமைப்பை பலவீனப்படுத்த முடியும் என்ற முடிவுக்கு வந்தார். சிங்கள தேசத்தின் ஆட்சியாளர்களை பொறுத்தவரையில் தமது இனத்தில் பற்று கொண்டவர்கள் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஒருவர் தருவது போல் நடிப்பார். மற்றையவர் தனது அடாவடித்தனத்தைகாட்டுவார்.பாரியளவில் யுத்தம் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற பொழுது சமாதானப் பேச்சுவார்த்தைகள் எனக் கூறி ஆயுதங்களை களஞ்சியப்படுத்தி மீண்டும் போருக்கான உத்திகளை மேற்கொண்டார். UNB கட்சியை பொருத்தவரையிலும் அன்று ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன கூறியதொரு விடயம் போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என்பதே இந்த UNB அரசாங்கத்தில் தான் இந்த நாட்டில் பல படுகொலைகள் இடம்பெற்றது.

குறிப்பாக 300 மாணவர்கள் ஒரே நேரத்தில் சமாதியாக்கப்பட்டார்கள். அதனுடைய சிறு பகுதியை நாம் இங்கு தருகின்றோம்.

புலிகளால் மனித வெடிகுண்டு மூலம் கொலை செய்யப்பட்ட ஜனாதிபதி பிரேமதாசவின் மகன் சஜித் பிரேமதாச இலங்கைப்பாராளுமன்றத்தில்எதிர்க்கட்சித் தலைவராக இருந்துகொண்டு தன்னை ஒரு காருண்யம் நிறைந்த மனித உரிமைவாதி என்பது போலப் பேசி வருகிறார். ஆனால் அவரது தகப்பனார் ஆர்.பிரேமதாச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஜே.வி.பி. இயக்கம் நடத்திய இரண்டாவது (1987 - 1989) ஆயுதக் கிளர்ச்சியை அடக்குவதாகச் சொல்லிக் கொண்டு ஏறத்தாழ 60000 (அறுபதபயிரம்) சிங்கள மக்களை அவரது அரசு கொன்று குவித்துள்ளது. அவர்களில் பெரும்பாலோர் இளைஞர்கள். இந்த நிகழ்வை இன்று பலர் மறந்துபோய் அல்லது மறைத்து அரசியல் செய்து வருகின்றனர்.

இந்தக் கொலைகளில் அதிர்ச்சியூட்டும் கொடூரமான விடயம் என்னவெனில் எம்பிலிபிட்டிய மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்ற சுமார் 300 மாணவர்களை பிரேமதாசஅரசின்கூலிப்படையினர்பிடித்துச் சென்று கூட்டாகக் கொலை செய்து சூரியகந்த என்ற இடத்தில் புதைத்தமையாகும். அவர்களைக் கொலை செய்ததிற்கான ஒரேயொரு காரணம் அவர்கள் அனைவரும் ஜே.வி.பி. ஆதரவாளர்கள் என்ற சந்தேகத்தினாலாகும்.

இந்த மாணவர்களின் புதைகுழி 1994இல் அடையாளம் காணப்பட்டு தோண்டிப் பார்த்ததில் மாணவர்களின் ஏராளமான எலும்புக் கூடுகள் காணப்பட்டன. அதே போல 1989இல் பொலிசாரால் கொலை செய்யப்பட்ட இன்னொரு 36 பேரின் சடலங்கள் அடங்கிய புதைகுழி ஒன்று அங்கும்புர என்ற இடத்திலும் கண்டு பிடிக்கப்பட்டது.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் சத்துருகொண்டான் மயிலியன்தனை கிழக்கு பல்கலைக்கழகம் என்பனவற்றில் நடத்தப்பட்ட அரச படைகளின் கொலைகளில் குழந்தைகள், மாணவர்கள் வயோதிபர்கள், பெண்கள் உட்பட பல நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். வடக்கில் நெடுங்கேணி பிரதேசத்தில் ஒதியமலை என்ற கிராமத்திலும் பல பொதுமக்கள் இவ்வாறு கொலை செய்யப்பட்டனர்.

அதேநேரத்தில்அரசுக்கெதிராகப்போராட்டம் நடத்துவதாகக் கூறிக்கொண்டு ஜே.வி.பியும் புலிகளும் கூட பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்களைக் கொன்று குவித்துள்ளனர்.

ஆனால் இலங்கையில் நடைபெற்ற இந்தப் படுகொலைகள் பற்றி ஆட்சிக்கு வந்த எந்தவொரு அரசும் உரிய விசாரணைகள் நடத்தி இவற்றைப் புரிந்த குற்றவாளிகளைக் கண்டுபிடித்து இன்றுவரை தண்டிக்கவும் இல்லை.

இறுதி யுத்த நேரத்தில் முள்ளிவாய்க்காலில் அரச படைகளால் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் பற்றி திரும்பத் திரும்பப் பேசி வரும் ' சர்வதேச சமூகம்' கூட இந்தப் படுகொலைகள் குறித்து மௌனமாகவே இருந்து வருகின்றது.

ரணில் விக்ரமசிங்கவை பொறுத்தவரையில் அவரின் இராஜதந்திர அரசியல் வரலாற்றில் அவர் பற்றிய தெளிவு மிக அத்தியாவசியமானதொன்று.

ரணில் விக்ரமசிங்க 24 மார்ச் 1949 பிறந்தார். இவர் இலங்கை அரசியல்வாதி ஆவார். இவர் நவம்பர் 12 1994 முதல் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக பதவி வகித்துவருகின்றார். 1977 ஆம் ஆண்டில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் மூன்று தடவைகள் பிரதமராகப் பதவி வகித்தார்.

காமினி திசாநாயக்கா 1994 அரசுத்தலைவர் தேர்தல் பரப்புரைக் காலத்தில் படு கொலை செய்யப்பட்டதை அடுத்து ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். 1993 முதல் 1994 வரையும் பின்னர் 2001 முதல் 2004 வரையும் பிரதமராகப் பதவியில் இருந்தார். 2015 ஜனவரி 8 இல் ரணில் விக்கிரமசிங்க அரசுத்தலைவர் மைத்திரிபால சிறிசேன வினால் இலங்கையின் 21-வது பிரதமராக நியமிக்கப்பட்டார்.

விக்கிரமசிங்கவின் அரசியல் கூட்டணியான நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி 2015 நாடாளுமன்றத் தேர்தலில் 106 இடங்களைக் கைப்பற்றியது. ஆட்சி அமைப்பதற்குத் தேவையான 113 என்ற அறுதிப் பெரும்பான்மை கிடைக்காவிடினும் இலங்கை சுதந்திரக் கட்சியின் 35 உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவியை வழங்கியதன் மூலமும் 16 உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனையற்ற ஆதரவை வழங்க முன்வந்ததை அடுத்தும் ரணில் விக்கிரமசிங்க ஆட்சி அமைத்தார். 2018 அக்டோபர் 26 இல் விக்கிரமசிங்க அரசுத்தலைவர் மைத்திரிபால சிறிசேனவினால் பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். முன்னாள் அரசுத்தலைவர் மகிந்த ராசபக்ச பிரதமராக நியமிக்கப்பட்டார். இதனை விக்கிரமசிங்க அரசியலமைப்புச் சட்டத்திற்குப் புறம்பானது எனக் கூறி பதவி விலக மறுத்தார். இதனை அடுத்து



அரசியலமைப்பு நெருக்கடி ஏற்பட்டது. விக்கிரமசிங்கவைப் பதவி விலக்கியது அரசியலமைப்புக்கு முரணானது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதை அடுத்து 2018 டிசம்பர் 16 இல் விக்கிரமசிங்கவிற்கு மீண்டும் பிரதமர் பதவி வழங்கப்பட்டது. 2019 அரசுத் தலைவர் தேர்தலில் கோத்தாபய ராசபக்ச பெரும் வெற்றி அடைந்ததை அடுத்து விக்கிரமசிங்க 2019 நவம்பர் 20 இல் பிரதமர் பதவியைத் துறந்தார்.

இவரே 2004 ஆம் ஆண்டு சமாதான ஒப்பந்த பேச்சுவார்த்தையின் போது தமிழீழ விடுதலைப்புலிகள் கருணா பிரபாகரனின் பிரிவுக்கு காரணமானவர். இவரின் நரித்தனம் என்பது ஜே.ஆர்.ஜெயவர்தனவிற்கு பின்னர் செயற்படத்தொடங்கியது. செக்க பாம்பை போன்று இருக்கும் இவர் உடல் இருக்க உள் அவையவங்களை நொருக்கும் ஒரு விசமியாகவே இவர் செயற்பட்டு வருகின்றார். ரணசிங்க பிரேமதாஸ அவர்கள் இந்திய இராணுவத்துடன் தமிழீழ விடுதலைப்புலிகளை மோதவிட்டு அவருடைய இராஜதந்திர நகர்வை நகர்த்தினார். அதுபோன்றே இவரின் செயற்பாடுகளும் அமையப்பெற்றுள்ளது. தற்பொழுது மீண்டும் பாராளுமன்றத்திற்குள் நுழைவதற்கான நடவடிக்கைகளில் தீவிரம் காட்டிவரும் இவர் ஆட்சி கவிழ்ப்பு ஒன்றை ஏற்படுத்தும் அமெரிக்கா இந்தியா பின்புலத்துடனேயே களமிறங்குகின்றார். இருக்கக்கூடிய அரசாங்கத்தை வைத்தே தமிழ் மக்களுக்கான தீர்வுதிட்டத்தை பெற்றுக்கொள்ளாது மீண்டும் முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை நம்பி ஏமாறுகின்ற அல்லது ஏமாற்றப்படுகின்ற சூழ்நிலையையே இவர் ஏற்படுத்துவார். பாலைவன ரீதியாக ஈராக் நாட்டின் சதாமுசைனும் பனங்காட்டு நரியாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இலங்கை நரியாக முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் இடம்பிடித்துள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஆகவே இந்த வரிசையில் ரணில் விக்ரமசிங்கவை நம்பி மீண்டும் ஒரு கூட்டு ஒப்பந்தத்தின் கீழ் கறிச்சட்டியில் தவறி அடுப்பில் விழுந்த கதையாக தமிழர்களின் அரசியல் நிலை மாறக்கூடாது. இவர் 5 தடவைகள் பிரதமர் ஆசனத்தை அலங்கரித்தார்.

1. கொழும்பு, கொள்ளுப்பிட்டி, 5 ஆம் ஒழுங்கையில் உள்ள தனது பாரம்பரிய இல்லத்தைக்கூட பெரிய அளவில் மறுசீரமைப்புச் செய்துகொள்ளவில்லை. தனக்கென்று இருக்கும் அந்த ஒரேயொரு வீட்டையும் தனது மரணத்தின் பின்னர் தனது பாடசாலையான றோயல் கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்து உயில் எழுதிக் கொடுத்து விட்டார்.

2. அவரது குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் யார் யார் என்பதுகூடப் பொது மக்களுக்குப் பெரிதாகத் தெரியாது. அவர்கள் எவரையுமே அரசாங்கப் பதவிகளில் ஒருபோதுமே இருக்கவில்லை. வாரிசுகளும் இல்லை, வாரிசுகளுக்காக பதினான்கு தலைமுறைகளுக்கு நாட்டைக் கொள்ளையடித்துச் சொத்துச் சேர்க்க வேண்டிய தேவையும் அவருக்கு இல்லை.

3. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த களனி விகாரை முழுக்க முழுக்க அவரது தாயாரின் அன்பளிப்புகள் மூலம் நிறுவப்பட்டது. அதன் நிர்வாக சபையில் நீண்ட காலம் பணியாற்றினார் பின்னர் அதிலிருந்து விரட்டவும் பட்டார். ஆனால் அந்த விகாரையையோ வேறெந்த விகாரைகளையோ அவர் ஒருபோதும் தனது அரசியலுக்குப் பயன்படுத்தவில்லை.

4. தொலைக்காட்சி மற்றும் கம்பியூட்டர்களை இந்த நாட்டுக்கு அறிமுகம் செய்ததில் அவர்தான் முன்னோடி. அவரது ஒரு சகோதரரேமுதன்முதலாகஒருதொலைக்காட்சி நிறுவனத்தை ஆரம்பித்தார். அந்தக் தொலைக்காட்சியையோ அரசாங்கத்தின் தொலைக்காட்சிகளையோ ஒருபோதும் தனது அரசியலுக்குப் பயன்படுத்தியதில்லை. ஒரேயொரு தடவை அவர் நல்லாட்சி அரசாங்கத்தில் பிரபல ஊடகவியலாளர் சன்னஸ்கலவின் அழைப்பின் பேரில் கலந்துகொண்டார். அப்போது சன்னஸ்கல 'உங்கள் குடும்பம்தான் தொலைக்காட்சியையே நாட்டுக்குத் தந்தது. அரசாங்கத் தொலைக்காட்சிக்குக் கூட நீங்கள் ஏன் இவ்வளவு காலத்தில் ஒரு தடவையேனும் வரவில்லை ?' எனக் கேட்டபோது ஒரு புன்னகையோடு 'என்னை யாரும் அழைக்கவில்லை' என்று தான் பதிலளித்தார்.

5. தோல்வி மேல் தோல்விகள் வந்த போதிலும் ஒருபோதும் துவண்டு போகவில்லை மக்களைக் கடிந்துகொள்ளவில்லை.

6. தனது அரசியலுக்காக ஒருபோதும் பௌத்த மதத்தையோ சிங்கள இன உணர்வையோ தேசப் பற்றையோ விலைகூறி விற்கவில்லை வேஷம் போடவில்லை.

இவ்வாறான குணஇயல்புகள் இவருக்குள் இருந்தாலும் தமிழினத்தின் தீர்வு திட்டம் தொடர்பில் ஒரு அசமந்த போக்கை கொண்டவராகவும் வடகிழக்கிணைந்த தமிழர் தாயகம் தமிழினத்திற்கு வழங்கக்கூடாது என்பதில் உறுதியாக தனது அதிகாரம் இருக்கும் வரை செயற்பட்டவர்.

இவரது ஐக்கிய தேசியக் கட்சியும் அவ்வாறே கடந்த காலம் செயற்பட்டு வந்தது. மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தினால் தமிழினம் கொலை செய்யப்பட்டதை விட ஜே. ஆர். ஜெயவர்தனவினால் இந்த நாட்டில் படு கொலை செய்யப்பட்டவர்களே அதிகம்.

ஆகவே ரணில் விக்ரமசிங்கவின் செயற்பாடுகள் நீண்ட காலத்திட்டமுடையது. தமிழினத்தின் அரசியலை அடியோடு குழிதோண்டி புதைக்கும் செயற்பாடாகவே இவரின் அரசியல் மீள் வருகை இருக்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

நெற்றிபொறியன்

# சீன ஆய்வகத்தில் உருவாக்கப்பட்ட உயிரியல் ஆயுதமே கொரோனா வைரஸ்!

சீனாவின் வூஹான் இறைச்சிச் சந்தையில் உயிர் விலங்குகளை விற்கும் கடை ஒன்றிலிருந்து தான் கொரோனா வைரஸ் பரவியது. வௌவாலிடமிருந்து அலங்கு எனப்படும் எறும்புண்ணிக்கு இந்த வைரஸ் தொற்றியது.

**பிரீமியம் ஸ்டோரி**

'இது உண்மைதானா என்று விசாரித்து மூன்று மாதங்களில் ரிப்போர்ட் கொடுங்கள்' எனமே 26 அன்று உத்தரவுபோட்டிருக்கிறார், அமெரிக்க அதிபர் ஜோ பைடன். 'சீனா மீது நடவடிக்கை எடுங்கள். 730 லட்சம் கோடி ரூபாய் நஷ்ட ஈடு வாங்குங்கள்' என்று கொதிக்கிறார் முன்னாள் அதிபர் டொனால்டு ட்ரம்ப். உலகின் முன்னணி உயிரியல் நிபுணர்கள் பலர், 'இதில் உண்மை இருக்கிறது' என்று சாட்சியம் சொல்கிறார்கள். 'சீனாவின் செயலால் நூறாண்டுகளில் காணாத பேரழிவு ஏற்பட்டுவிட்டது' என்ற கோபக் குரல் ஓங்கி ஒலிக்கிறது.

அத்தனைக்கும் காரணம், கொரோனா வைரஸின் உருவாக்கம் குறித்து இப்போது வெளியாகியுள்ள ரகசியங்கள். உலகின் பல நாடுகளைச் சேர்ந்த தனிநபர்கள் சிலர் ஒன்றிணைந்து, ரகசிய ஆவணங்களைத் தோண்டி எடுத்திருக்கிறார்கள். 'கொரோனா வைரஸ் சீனாவில் ஆய்வுக்கூடத்தில் உருவாக்கப்பட்டது. அங்கிருந்து கசிந்தே அது உலகம் முழுக்கப் பரவியது' என்பதற்கு வலுவான ஆதாரங்களாக இந்த ஆவணங்கள் உள்ளன. **'DRASTIC' (Decentralized Radical Autonomous Search Team Investigating COVID-19)** என்ற பெயரில் பல நாடுகளில் இருந்தபடி செயல்படும் இந்தக் குழுவின் முக்கியமான புலனாய்வாளர் ஓர் இந்தியர். தன் உண்மை அடையாளத்தை வெளிப்படுத்தாமல், **The Seeker** என்ற பெயரில் ட்விட்டரில் இயங்கும் இவர், மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தவர். தன்னை அறிவியல் ஆசிரியர் என்று மட்டும் அறிமுகம் செய்துகொள்ளும் இவர், இன்னும் 30 வயதைத் தொடாத இளைஞர். இவர் பல ரகசியங்களைத் துப்பறிந்துள்ளார். நம் வசதிக்கு இவரை 'பெங்காலி ஸ்பை' என்று அழைப்போம்.

சீனாவின் வூஹான் இறைச்சிச் சந்தையில் உயிர் விலங்குகளை விற்கும் கடை ஒன்றிலிருந்துதான் கொரோனா வைரஸ் பரவியது. வௌவாலிடமிருந்து அலங்கு எனப்படும் எறும்புண்ணிக்கு இந்த வைரஸ் தொற்றியது. வூஹான் சந்தையில் இந்த விலங்கிடமிருந்து மனிதர்களுக்குத் தொற்றியது. இதுதான் கொரோனாவின் பிறப்பு பற்றி நமக்குச் சொல்லும் வரலாறு. இதைப் பலர் நம்பவில்லை.

'வூஹான் நகரில் அந்த மார்க்கெட்டுக்கு அருகிலேயே வைரஸ் ஆய்வுக்கூடம் இருக்கிறது. வௌவால்கள் வசிக்கும் குகைகளோ ஆயிரம் மைலுக்கு அப்பால் இருக்கின்றன. எங்கிருந்து தொற்று பரவுவது சுலபம்' என்ற கேள்வியுடன் **'DRASTIC'** குழுவினர் துப்பறியத் தொடங்கினார்கள். அவர்கள் சேகரித்திருக்கும் தகவல்கள் உலகையே அதிர வைத்துள்ளன.

'சீனாவின் வௌவால் பெண்' என்று அழைக்கப்படுகிறார் ஷி ஜெங்லி. இவர்தான் வூஹான் வைராலஜி இன்ஸ்டிட்யூட் இயக்குநர். இவர், இந்த ஆண்டு பிப்ரவரியில் மூன்று ஆய்வுக் கட்டுரைகளை எழுதினார். அவற்றில் அவர் போகிற போக்கில் சொல்லியிருந்த ஒரு தகவல் தான், இந்தப் புலனாய்வின் ஆரம்பப் புள்ளி. 'கொரோனா நோய்க்குக் காரணமான **SARS-CoV-2** என்ற வைரஸ், இதற்கு முன் பார்த்த எந்த வைரஸ் போலவும் இல்லை. சார்ஸ் நோயை உண்டாக்கிய வைரஸ்கூட இதுபோல இல்லை. அதன் மரபணுவை ஆராய்ந்தபோது, கொரோனா வைரஸுக்கு நெருங்கிய உறவாக **RaTG13** என்ற வைரஸ் மட்டுமே இருக்கிறது' என்று ஷி ஜெங்லி கூறியிருந்தார். **RaTG13** வைரஸ் என்ற பெயர் நம் பெங்காலி ஸ்பையின் ஆர்வத்தைக் கிளறியது. எங்கும் கேள்விப்படாத புதுப்பெயராக இருக்கிறதே என ஆராய்ச்சிக் கட்டுரைகளில் தேட ஆரம்பித்தார். அது அவரை ஒரு சுரங்கத்துக்கு அழைத்துச் சென்றது.

சீனாவின் வூஹான் மாகாணத்தில் மோஜியாங் என்ற இடத்தில் ஒரு சுரங்கம் இருக்கிறது. இந்தச்சுரங்கத்தில் வௌவால்கள் குடியேறி அசுத்தம் செய்திருந்தன. 2012-ம் ஆண்டு இதைச் சுத்தம் செய்ய ஆறு பேர் போனார்கள். அவர்களுக்கு ஜுரம், ஜலதோஷம், இருமல், மூச்சுத்திணறல் எனக் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டன. மூன்று பேர் இறந்துவிட்டனர். கிட்டத்தட்ட கொரோனா போன்ற பாதிப்பு. அந்த நோய் பற்றி ஆய்வு செய்ய ஷி ஜெங்லி போயிருந்தார் என்பது தெரிந்தது.

சீன அறிவியல் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடும் தளங்களில் இதுபற்றித் தேட ஆரம்பித்தார் பெங்காலி ஸ்பை. பல நாள்கள் தேடி, ஒன்றும் தேறாது எனக் கைவிட இருந்த நேரத்தில் குன்மிங் மருத்துவப் பல்கலைக்கழக ஆய்வுக் கட்டுரை ஒன்று கிடைத்தது. அந்தச் சுரங்கத் தொழிலாளர்கள் ஆறு பேருக்கு அளித்த சிகிச்சை பற்றிய கட்டுரை அது. 'சீன லாட வௌவாலில் இருந்து தொற்றிய சார்ஸ் போன்ற ஏதோ ஒரு வைரஸின் பாதிப்பு இது' என அதில் எழுதியிருந்தார்கள். வைரஸ் சாம்பிள்களை வூஹானுக்கு அனுப்பி வைத்தது பற்றியும் குறிப்பு இருந்தது.

இந்த விவரங்கள் இணையங்களில் வெளியானதும், மோஜியாங் சுரங்கம் பற்றிப் பலருக்கு ஆர்வம் ஏற்பட்டது. பி.பி.சி நிருபர் அங்கு போக முயன்றார். அவரைச் சீனாவிலிருந்தே வெளியேற்றினார்கள். ஏ.பி., என்.பி.சி என்று பல சர்வதேச ஊடகங்களின் நிருபர்கள் போனபோது, வழியிலேயே மடக்கிவிட்டார்கள். 'வால் ஸ்ட்ரீட் ஜர்னல்' நிருபர் அந்தச் சுரங்கத்தின் வாசல் வரை போனார். அவரைக் காவலில் வைத்துப் பல மணி நேரம் விசாரித்து, திருப்பி அனுப்பிவிட்டனர். இன்று வரை அந்தச் சுரங்கத்துக்குள் யாரும் போக முடியவில்லை.





ஸ்பெயின் நாட்டின் மேட்ரிட் நகரைச் சேர்ந்த பிரான்சிஸ்கோ ரிபேரா என்ற டேட்டா சயின்டிஸ்ட், வூஹான் வைராலஜி நிலையத்தின் ஆய்வுக்கட்டுரைகளை அலசி, பல திடுக்கிடும் தகவல்களை அம்பலப்படுத்தினார். 2012-ம் ஆண்டுக்குப் பிறகு அந்தச் சுரங்கத்துக்குப் பலமுறை வூஹான் நிபுணர்கள் சென்று ஏராளமான வைரஸ் சாம்பிள்களைச் சேகரித்து வந்திருக்கிறார்கள். அவர்கள் எடுத்து வந்தது **RaTG13** வைரஸ் மட்டுமல்ல, அதையும் சேர்த்து ஒன்பது விதமான வைரஸ்கள் கிடைத்திருக்கின்றன. இந்த வைரஸ்கள் பற்றி அவர்கள் வெளியுலகத்துக்கு எதுவுமே சொல்லவில்லை.

இந்த வைரஸ்களை வைத்து அவர்கள் என்ன செய்தார்கள் என்பது இன்னொரு அதிர்ச்சிச் செய்தி. இந்த வைரஸ்களை மனிதர்களுக்குப் பரவும்விதமாக மாற்ற முடியுமா, அப்படிப் பரவினால் அது எப்படி உருமாற்றம் அடையும் என்றெல்லாம் ஆராய்ச்சி செய்து வந்திருக்கிறார்கள். எலிகளிடம் இந்த சோதனைகளை நடத்தி, அந்த வைரஸ்களை வீரியம் உள்ளவையாக மாற்ற முயன்றிருக்கிறார்கள். கொரோனா வைரஸில் இருக்கும் ஸ்பைக் புரதமே, அதை எளிதில் மனிதர்களுக்குத் தொற்ற வழி செய்திருக்கிறது. இது வௌவால்களிடமிருந்து எடுக்கப்பட்டு, ஆய்வுக்கூடத்தில் வைத்து வைரஸ்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கலாம் என்பது நோய் அறிவியல் நிபுணர்களின் கணிப்பு. எதற்காக இதைச் செய்தார்கள்? 'எதிர்காலத்தில் மனிதர்களை அச்சுறுத்தக்கூடிய நோய்களுக்கு மருந்து கண்டறியவே இந்த ஆராய்ச்சி' என்கிறது வூஹான் ஆய்வுக்கூடம். ஆனால், 'உயிரி ஆயுதமாகவைரஸ்களைஉருமாற்றவேஇந்த ஆராய்ச்சி நடைபெற்றது' என்கிறது இதை உளவறிந்த குழு. 'உயிரி ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தப்படும் மூன்றாம் உலகப் போர்ச் சூழல் ஒன்றைச் சீன விஞ்ஞானிகள் யோசித்துப் பார்த்தனர்' என்ற திடுக்கிடும் செய்தியை ஆஸ்திரேலிய நாளிதழ் ஒன்று வெளியிட்டது.

2019 டிசம்பரில்தான் கொரோனாத் தொற்று முதன் முதலில் கண்டறியப்பட்டதாக சீனா வெளிப்படையாகச் சொன்னது. ஆனால், நவம்பர் மாதமே வூஹான் ஆய்வுக்கூட ஆராய்ச்சியாளர்கள் மூன்று பேர் விநோதமானஒருநோயால்பாதிக்கப்பட்டனர். 'இவர்களை என்ன நோய் தாக்கியது, என்ன சிகிச்சை கொடுத்தார்கள்' என்ற தகவலை சீனா மறைத்துவிட்டது. 'அதுதான் கொரோனாவின் முதல் தாக்குதல்' என்று உலக அறிவியலாளர்கள் இப்போது குற்றம் சாட்டுகிறார்கள். 'அந்த மூன்று பேருக்கு என்ன நேர்ந்தது எனச் சீனா சொல்ல வேண்டும்' என்று இப்போது அமெரிக்கா கேட்டிருக்கிறது.

வூஹானில் இருக்கும் இரண்டு பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இணைந்து 2020 பிப்ரவரியில் ஓர் ஆய்வுக்கட்டுரை வெளியிட்டனர். 'வௌவால்கள் பெரும்பாலும் எங்கும் திரியாமல் அமைதியாக குகைகளில் முடங்கியிருக்கும் குளிர் காலத்தில், வௌவால்களே விற்கப்படாத ஒரு நகரத்து மார்க்கெட்டில் எப்படி கொரோனா வைரஸ் பரவும்? இது நம்புகிற மாதிரி இல்லை. நாங்கள் அந்த மார்க்கெட் பகுதியை ஆய்வு செய்தோம். அங்கிருந்து வெறும் 280 மீட்டர் தூரத்தில்தான் வூஹான் நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் இருக்கிறது. வௌவால்களிலிருந்து சேகரிக்கப்பட்ட ஏராளமான வைரஸ்கள் அங்கு வைக்கப்பட்டுள்ளன. வூஹான் வைராலஜி இன்ஸ்டிட்யூட்டும் இந்த நகரில் தான் உள்ளது. பாதுகாப்பு இல்லாத சூழலில் இங்கு வைரஸ்கள் கையாளப்படுகின்றன' என்று குற்றம் சாட்டியது அந்த ஆய்வுக் கட்டுரை. வெளியான சில மணி நேரத்தில் அது இணையத்திலிருந்து நீக்கப்பட்டது.

அதே 2020 பிப்ரவரியில் தென் சீன பல்கலைக்கழக உயிரி தொழில்நுட்ப நிபுணர் போடாவ் ஜியோ என்பவர், 'வூஹானில் உள்ள ஓர் ஆய்வுக்கூடத்தில் இருந்தே கொரோனா வைரஸ் உருவாகியிருக்க வேண்டும்' என ஆய்வுக்கட்டுரை வெளியிட்டார். சில நாள்களில் அவர் அதைத் திரும்பப் பெற்றார்.

'கொரோனா வைரஸ் சீன ஆய்வுக்கூடத்தில் உருவாக்கப்பட்டு, அங்கிருந்து கசிந்தது' என இப்படி சில தன்னார்வலர்கள் செய்த கண்டுபிடிப்பை அறிவியல் சமூகமும் உறுதி செய்கிறது. அமெரிக்காவின் புகழ்பெற்ற கொரோனா ஆய்வாளர் ஜெஸ்ஸி ப்ளூம் முதலில் இதை உறுதி செய்ய, ஹார்வர்ட், யேல், ஸ்டான்ஃபோர்டு எம்.ஐ.டி எனப் பல நிறுவனங்களின் விஞ்ஞானிகள், 'வூஹான் வைராலஜி இன்ஸ்டிட்யூட் ஆய்வு செய்யப்பட வேண்டும்' என்று குரல் கொடுத்துள்ளனர். 'கொரோனா வைரஸ் ஏராளமான உயிர்களைப் பறித்துள்ளது. தங்கள் அன்புக்குரிய உறவுகளை இழந்து ஏராளமானவர்கள் தவிக்கிறார்கள். எத்தனையோ குடும்பங்கள் நஷ்டமடைந்து வீதிக்கு வந்துள்ளன. பல தொழில் நிறுவனங்கள் திவாலாகிவிட்டன. இது இயற்கையாகப் பரவிய நோய் என்றால், எதுவும் செய்ய முடியாது. ஆனால், சீனாவின் தவறால் இவையெல்லாம் நிகழ்ந்தன என்றால், மானுட குலத்துக்குப் பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் அந்த தேசத்துக்கு உண்டு" என உறுதியாகச் சொல்கிறார் நம் பெங்காலி ஸ்பை.

**அமெரிக்க நிதியில் சீனா செய்த சதி!**

சீனாவைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்த அமெரிக்க அரசு துடிக்கும் நேரத்தில், அங்கேயே ஒரு கோஷ்டி சீனாவைக் காப்பாற்ற நினைக்கிறது. இதற்குத் தலைமை தாங்குபவர், பீட்டர் டஸாக். எக்கோ ஹெல்த் அலையன்ஸ் என்ற இலாப நோக்கமற்ற ஆராய்ச்சிக் குழுவை நடத்தி வருகிறார் இவர். ஆபத்தான தொற்றுநோய்களை ஏற்படுத்தும் கிருமிகளை ஆய்வு செய்கிறது இந்த அமைப்பு.

11ஆம் பக்கம் பார்க்க...

சுழியோடி

# யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் பிள்ளையார் சிலை உடைப்பிற்கு, சிவசேனா அமைப்பின் தலைவர் கண்டனம்

## சிவசேனையினுடைய இலங்கைக்கான தலைவராக செயற்படுகின்ற மறவன் மரபு சச்சியானந்தன் ஐயா அவர்களுடனான நேர்காணல்

**கேள்வி :– தற்பொழுது மதவாத பிரச்சனையாக மிருசுவில் பகுதியிலே பிள்ளையார் சிலை உடைக்கப்பட்டிருக்கின்றது. இது தொடர்பாக அங்கு ஒரு பதட்டமான சூழ்நிலை கிறிஸ்தவர்கள் இந்துக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கின்றது. இது தொடர்பில் உங்களுடைய கருத்து என்ன?**

**பதில் :–** மிருசுவிலில் தெற்கு, வடக்கு என இரு நிலதாரிப்பிரிவுகள் அங்கே 95 விழுக்காடு சைவர்கள் மற்றையவர்கள் கிறிஸ்தவர். புத்தர்களோ முகமதிர்களோ அங்கே இல்லை. மிருசுவில் எப்பொழுதுமே பதற்றமான இடமாக இருக்கின்றது. வட மிருசுவிலிலே ஒரு ஐரோப்பிய புலம்பெயர்களால் அங்கே மதம் மாறுகின்றார் தன்னுடைய மிருசுவில் வீட்டை அந்த சபைக்கு கொடுக்கின்றார். அந்த வீடு சைவ திருக்கோவிலுக்கு அருகிலேயே இருக்கின்றது. அதை பிரதேசசபை மற்றும் அனைவருக்கும் கூறியும் அந்த சபையிலுள்ளவர்கள் எழும்ப மறுக்கின்றார்கள். அங்கே தற்பொழுது கிறிஸ்தவ தேவாலயம் கட்ட முயலுகின்றார்கள். இது இரண்டு மூன்றாண்டுகளாக தொடர்ந்து வருகின்றது.

வட மிருசுவிலிலே இன்னுமொரு பகுதியிலே சபைகள் போய் ஜெபக்கூட்டங்களை நடத்த முயற்சி செய்தார்கள், எங்களையும் அழைத்தார்கள். நானும் திரு. மோகன் அவர்களும் அங்கே சென்றோம். மோகன் அவர்களை அடித்துதைத்தார்கள். அவருடைய ஈருருளி திறப்பையும் எடுத்துச்சென்றுவிட்டார்கள். கொடிகாமத்திலே உள்ள காவல் நிலையம் ஒன்றிலே முறையிட்டோம் நாங்கள் அங்கே போனதன் காரணம் செபக்கூட்டங்கள் நடைபெறுவதை தடுக்கலாம் என்ற முயற்சியிலே. கெற்பலியிலே முழுவதும் சைவக் கிராமங்களாக இருந்த இடத்திலே தற்பொழுது 169 கிறிஸ்தவர்கள் 2019 ஆம் ஆண்டு இருந்தார்கள். 600 சைவர்கள் மிருசுவில் தெற்கிலே இருக்கின்றார்கள். அந்த 169 கிறிஸ்தவர்களுக்கு இரண்டு தேவாலயங்கள் இருக்கின்றது. ஒன்று கெற்பலியிலே மற்றையது மிருசுவிலிலே. 600 பேருக்கும் ஒரேயொரு திருக்கோவில் தான் வடியப்பட்டிருக்கின்றது பிள்ளையார் கோவில். ஏன் இதையெல்லாம் கூறுகின்றேன் என்றால் கடந்த சில ஆண்டுகளாக மிருசுவிலிலே கிறிஸ்தவ வைச பதற்ற நிலையுள்ள ஊராக இருந்திருக்கின்றது. நாங்கள் நேரடியாக போய் தலையிடவேண்டிய தேவையிருக்கின்றது.

மிருசுவிலிலே திரு.கண்ணன் எங்களை அழைத்திருக்கின்றார். வடமிருசுவிலில் திரு.ஜயாதுரை எங்களை அழைத்திருக்கின்றார். நாங்கள் அங்கே சென்றிருக்கின்றோம் அவர்களின் சிக்கல்களை நேரிலே பாத்திருக்கின்றோம். அன்று செவ்வாய்க்கிழமை (08.04.2021) உலர்காலை 5.20 மணியளவில் கண்டி நெடுஞ்சாலை, தொடர்வண்டிச்சாலை இரண்டிற்கும் இடையிலே உள்ள அழகான பிள்ளையார் கோவில் அங்கே மிருசுவில் தெற்கு சைவ மக்கள் வழிபட்டுக்கொண்டிருக்கின்றார்கள். கண்டி நெடுஞ்சாலையிலே போகின்ற ஓட்டுனர்கள் இறங்கி தேங்காய் உடைத்து கற்பூரம் ஏற்றிவிட்டு செல்கின்றார்கள். பிள்ளையார் கோவில் இருக்கின்றது வழிபடுகின்றார்கள் கடவுள் நம்பிக்கை ஊட்டுகின்றார், இடர் கலைப்பவர் பிள்ளையார் அவரை கும்பிட்டுகொண்டு சென்றால் வழியில் வருகின்ற தடைகள் கொடுமைகள் துன்பங்கள் துயரங்கள் நீங்கும் என்ற நம்பிக்கை சைவர்களுக்கு இருப்பதால் சைவர்கள் அல்லாத புத்தர்களுக்கும் இருப்பதால் அது சைவர்களாக இருந்தாலும் புத்தர்களாக இருந்தாலும் சிலசமயம் சைவர்களும் புத்தர்களும் அல்லாத நல்ல வழிபாட்டு நோக்கமுடைய கிறிஸ்தவர்களாக இருந்தாலும் அங்கே வழிபட்டுவிட்டு செல்வார்கள். ஏன் அந்த கோவிலை ஒருவர் உடைக்க வேண்டும். கள்ளத்தபரனையா, விவசாய நிலையமா, கொலைக்கூடமா என்ன காரணம்? இன்று இதே கண்டி நெடுஞ்சாலையிலே அரியாலை சந்தியிலே விதிகளை மீறி ஒரு கிறிஸ்தவ வழிபாட்டு இடம் இருக்கின்றது. நாவற்குழி சந்தியிலே விதிமுறைகளை மீறி கிறிஸ்தவ வழிபாட்டு இடம் இருக்கின்றது. விதி என்ன சொல்கின்றது கண்டி நெடுஞ்சாலைகள் போன்ற தேசிய நெடுஞ்சாலையிலே வீதியின் நடுவிலிருந்து 22 மீற்றருக்குள் எந்த கட்டடமும் புதிதாக கட்ட முடியாது. இருக்கின்ற கட்டடத்தைகூட இடித்து பக்கத்திலே உள்ள காணிக்கு கொடுத்துவிடுவார்கள். இதற்காக நெடுஞ்சாலைத்துறை அடையாள கற்களையெல்லாம் வைத்திருக்கின்றார்கள். அதையும் மீறி அரியாலையிலே கட்டியிருக்கின்றார்கள்.

கிளிநொச்சியிலே மெதடிஸ் சேர்ஜ்க்கு முன்னுக்கு கட்டியிருக்கின்றார்கள். கேரதீவிலே பாலம் தொடங்கும் இடத்திலே கட்டியிருக்கின்றார்கள். கேரதீவிலே மக்களின் நிலதாரி இடத்திலிருந்து கத்தோலிக்கர்களே இல்லாத ஊர். முழுக்க முழுக்க சைவர்கள் இருக்கின்ற ஊர். அந்த ஊரிலே ஒரு மரியாள்சிலை வைத்திருக்கின்றார்கள் அதுவும் நெடுஞ்சாலை துறையின் விதிகளை மீறி. இவ்வாறெல்லாம் இருக்கின்றபொழுது நாங்கள் வழிபாட்டு தலங்கள் எதையும் குழப்புவதே இல்லை. சைவர்கள் எந்த கிறிஸ்தவ வழிபாட்டு தலங்களையாவது உடைக்கின்றார்களா? சைவர்கள் எந்த கிறிஸ்தவர்களையாவது மதம் மாறம்படி கேட்கின்றார்களா? சைவர்கள் யாரையேனும் மனம் உடையும்படி பேசுகின்றார்களா? ஆனால் கிறிஸ்தவர்கள் விடமாட்டேன் என்கின்றார்கள். நீ மதம் மாறு இல்லையேல் கோவிலை உடைப்பேன், திருக்கேதிஸ்வர வளைவை உடைப்பேன் சிலாபத்துறையிலே ஓடஓட பாதிரியார் தலைமையிலே விரட்டுவேன் மூன்றாம் பிட்டியிலே அம்மன் கோவிலுக்கு செல்கின்ற பாதையை வேலி போட்டு தடுத்து நிறுத்துகின்றார் பாதிரியார். 4 1/2 ஆண்டுகளாக சைவர்கள் அந்த பாதையிலே செல்லமுடியவில்லை, அம்மன் கோவிலுக்கு செல்லமுடியவில்லை, காவடிகள் போகமுடியவில்லை. நான் தலையிட்டு அந்த தடுப்பை எடுத்தேன்.

சிலாபத்துறையிலே நேரடியாக நான் சென்று அங்குள்ள பிரச்சனைகளை தீர்ப்பதற்கு பிரதேச செயலகத்தில் பேசி அந்த சைவர்களுக்கு உருதுணையாக இன்றுவரை இருக்கின்றேன். ஏறத்தாள 65 சைவக்குடும்பங்களின் வீடுகள் ஒவ்வொன்றிலும் நந்திக்கொடி கட்டிய பின்பு தான் இன்று சிலாபத்துறையிலே கிறிஸ்தவர்கள் சைவர்களினுடைய விடயங்களில் தலையிடுவதை குறைத்துக்கொண்டிருக்கின்றார்கள். இல்லையேல் கையிலே தடியை வைத்துக்கொண்டு பாதிரியாரின் தலைமையிலே இந்துக்களை தாக்குவதற்கு ஓடுகின்றார்கள் கிறிஸ்தவர்கள். அதற்கான காணொளி சாட்சியும் இருக்கின்றது, காவல் நிலையத்திலே புகார் இருக்கின்றது, பிரதேச செயலகத்திலே புகார் இருக்கின்றது. ஏன் மூன்றாம்பிட்டி தொடர்பாக, வெள்ளாங்குளம் தொடர்பாக, நருவிலிகுளம் தொடர்பாக, திருநாவற்குளம் தொடர்பாக வழக்குகள் இருக்கின்றன. திருநாவற்குளத்திலே பிள்ளையார் கோவிலை உடைத்ததற்காக வங்காளத்தை சேர்ந்த ஒரு அரச உத்தியோகத்தரான பெண்ணை சிறையிலே அடைத்திருக்கின்றார்கள். அவர் பிணையிலே வெளியில் வந்து இன்றும் வழக்கை சந்தித்துக்கொண்டிருக்கின்றார். ஏன் இந்த வன்முறை? யார் இந்த வன்முறையை தூண்டுகின்றார்கள்? இந்த கோவில்களை உடைக்க வேண்டுமா? அது வழிபாட்டு இடமல்லவா? ஏனைய மதங்களை மதித்து நடக்க வேண்டும். இயேசுகிறிஸ்துவின் வரிகள் மிக அழகாக தெளிவாக மக்களை



வழிநடத்துகின்ற வரிகள். ஒருவர் உன் இடது கன்னத்தில் அடித்தால் அவனுக்கு வலதுகண்ணில் தீங்குவரும், இன்னார் செய்தாரே ஒருத்தர் அவர்நான நன்னையம் செய்துவிடல் என்று இயேசுகிறிஸ்துக்கு முன்பே நாங்கள் தமிழிழே சொல்லி வைத்திருக்கின்றோம். அந்த வகையிலே சைவர்களாகிய நாங்கள் திருக்குறளை எங்களுடைய சமய நூலாக கொண்டு அந்த வழியில் நடக்கின்றோம். நாமார்க்கும் குடியல்லோர் என்ற நிலைப்பாட்டிலே இருக்கின்றோம். ஆனால் கிறிஸ்தவர்கள் எங்களை அடிமைப்படுத்த வேண்டும், எங்களின் கோவில்களை உடைக்க வேண்டும், எங்களுடைய கோவில்களுக்கு செல்கின்ற பாதைகளை தடுக்க வேண்டும், எங்களுடைய இந்துக்கள் நடுவே சிலுவைகளை நிறுவ வேண்டும், ஜெபக்கூட்டங்களை நடத்த வேண்டும் என்றெல்லாம் நினைக்கின்றார்கள். மிருசுவிலிலே நானும் எனது நண்பரும் போனபோது நான் மேலே கூறினேன் எங்களின் ஈருருளியை அடித்தார்கள். யார் அடித்தார்கள் இந்து பெரும்பான்மையுள்ள ஊரிலே செபசெய்தி கூட்டம் நடத்துபவர்கள் அடித்தார்கள். மோகனுக்கு காயம் ஏற்பட்டது. இவற்றையெல்லாம் சொல்வதற்கான காரணம் மிக அழகான ஒரு தீவிலே நாங்கள் வளர்ச்சியை நோக்கி போக வேண்டும். வீழ்ச்சியை நோக்கி போகக்கூடாது. வளர்ச்சியை நோக்கி போக வேண்டும் என்றால் ஒருவர் மற்றையவரை மதிக்க வேண்டும்.

**கேள்வி :– மிருசுவில் சம்பவம் தொடர்பாக பிள்ளையார் சிலை உடைக்கப்பட்டது. கிறிஸ்தவர்கள் தான் இதை செய்தார்கள் என்று கூறுகின்றீர்களா?**

**பதில் :–** காவல் துறையினர் கண்டுபிடித்ததன் பின்பு தான் முழுமையான விவரங்கள் தெரியவரும். ஆனால் மிருசுவிலிலே கிறிஸ்தவர்களுக்கும் சைவர்களுக்கும் தொடர்ச்சியாக பதற்ற நிலை இருந்து வருவதை நான் அறிவேன். நேரடியாக நான் போய் சில இடங்களிலே பார்த்திருக்கின்றேன். கிறிஸ்தவர்கள் தான் உடைத்தார்கள் என்று கூறுவதற்கு நான் யார்? அவ்வாறு கூறினால் காவல் துறையினரில் கடமையை நான் கையில் எடுத்துக்கொள்வதாகும். ஆனால் சைவக்கோவிலை உடைக்கும் ஒரு மரபுவழி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி இருக்கின்றது. அது சைவப்பெரும்பான்மை கல்லூரி அதில் 1000 மாணவர்களில் 100 மாணவர்கள் தான் கிறிஸ்தவ மாணவர்கள். அந்த கல்லூரிக்காக எழுதப்பட்ட நிலம் இருக்கின்றது. 1960 களிலே அரசு கையகப்படுத்திய பொழுது கிறிஸ்தவர்களிடமிருந்து யேர்ஸ்சஸ் தலைமையகத்திற்கு போய்விட்டது. அதை அந்த நேரத்திலே மாணவர் ஒருவன் சென்று வழமைபோல் தன்னுடைய ஈருருளியை நிறுத்தினான் பாதிரியார் தலைமையிலே அங்கு சென்று அந்த மாணவனை அடித்தார்கள். இது என்ன வன்முறை? உங்களுக்கு ஏதேனும் பிரச்சனை என்றால் நேரடியாக முதல்வரிடதானே செல்ல வேண்டும். கல்லூரி முதல்வரிடம் சென்று மாணவன் செய்வது தவறென்று கூற வேண்டும். அதைவிடுத்து மாணவனை நேரடியாக ஏன் தாக்க வேண்டும்?

**கேள்வி :– யார் தாக்கினார்கள்.**

**பதில் :–** பாதிரியார் தலைமையிலே சென்று தாக்கினார்கள். அதற்கான காணொளி காட்சியும் இருக்கின்றது. கிறிஸ்தவர்கள் வன்முறையை கையிலெடுக்கின்றார்கள் வலம்புரி நாளிதலிலே செய்தி வருகின்றது, "சைவ கோவில் பெயர் கொண்ட வீதியின் பெயரை கிறிஸ்தவ பெயராக மாற்றலாமா" என்ற சிக்கல் இருக்கின்றது என்று செய்தி வருகின்றது. ஊர்காவற்றுறையிலே இருந்து வந்து வலம்புரிநாளிதலை தாக்க முயல்கின்றார்கள். ஊர்காவற்றுறையிலிருந்து யாழ்பாணம் வந்து நீராவியடி போய் வலம்புரி நாளிதல் அலுவலகத்திற்கு சென்று தாக்கினார்கள். இதற்காக நான் ஒருநாள் முழுவதும் உண்ணா நோன்பு இருந்தேன் கத்தோலிக்க ஆயரின் அலுவலகத்திற்கு முன்னால். நாங்கள் எங்காவது நல்லை ஞானசம்பந்தன் தொடர்பாகவோ அல்லது தவத்திரு வேலவன் சுவாமிகள் தொடர்பாகவோ கங்கை அடிகள் தொடர்பாகவோ தவத்திரு கைலாய சுவாமிகள் தொடர்பாகவோ தவத்திரு கிளிநொச்சி சின்னையா சுவாமிகள் தொடர்பாகவோ ஏதாவது முறைப்பாடு இருக்கின்றதா வன்முறையையில் ஈடுபட்டார்கள், வன்முறையை தூண்டினார்கள், கோவிலை உடைத்தார்கள், கத்தோலிக்க நிலையங்களை தாக்கினார்கள், முகமது நிலையங்களை தாக்கினார்கள், புத்தர் நிலையங்களை தாக்கினார்கள் என்றாவது சின்ன குற்றச்சாட்டேனும் இருக்கின்றதா? ஏன் இந்த பாதிரிமார்கள் தொடர்ச்சியாக இவ்வாறு நடக்கின்றார்கள், மாணவர்களை தாக்குகின்றார்கள், கோவிலுக்கு செல்வதை தடுக்கின்றார்கள்.

தற்பொழுது மிருசுவிலில் நடந்த நிகழ்ச்சி காவல்துறையினரின் அறிக்கை வந்ததன் பின்னர் தான் தெரியும் யார் அந்த நடவடிக்கையை எடுத்தார்கள் என்று. பயணத்தடைகள் உள்ள இடம் எத்தனையோ தூரங்களிலே இராணுவத்தினர்கள் நிற்கின்றார்கள், காவல்துதுறையினர் நிற்கின்றார்கள் பயணம் செய்கின்ற ஓட்டுனர்கள் இடையே அனைத்தையும் வாங்கி பார்க்கின்றார்கள். இதையும் மீறி கொடுமை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு அந்த கோவிலை இடித்திருக்கின்றார்கள். யார் இடித்தார்கள் என்பதை காவல்துறையினர் கண்டுபிடித்து கூற வேண்டும். கிறிஸ்தவர்கள் இடித்தார்களா? புத்தர்கள் இடித்தார்களா? முகமதியர்கள் இடித்தார்களா? அல்லது குடிகாரர்கள், கொலைகாரர்கள் வேறு நோக்கத்திற்காக இடித்தார்களா என்பதை காவல்துறை புலனாய்வினருக்கு தான் தெரியவரும். அதுவரை நான் கருத்து தெரிவிக்க முடியாது. ஆனாலும் தொடர்ச்சியாக சைவக்கோவில்கள் தாக்கப்படுவதற்காக நான் ஒரு பட்டியலே தரமுடியும். அதற்கான காணொளி காட்சிகள் என்னுடைய நேரடி அனுபவங்கள் போன்றன இருக்கின்றன.

**இரணியன்**

**தொடரும்...**

# தீப்பற்றி எரிந்து முடிந்த கப்பலும், மிக மோசமான பேரழிவைச் சந்தித்துள்ள சமுத்திரமும்

அண்மையில்எக்ஸ்பிரஸ்பேர்ள்என்கிற கப்பல் இலங்கைக்குச் சொந்தமான கடற்பரப்பில் எரிந்து சின்னாபின்னமான சம்பவம் ஒன்று பதிவாகியிருக்கிறது. கப்பல் எரிய ஆரம்பித்து பின்னர் வேகமாக தீப்பரவலுக்கு உள்ளாகி இன்று கடலுக்குள் முழுதாக மூழ்கும் நிலையில் நீரில் மிதந்தவண்ணம் உள்ளது.

இந்தக் கப்பலில் மே மாதம் 20ம் திகதி தீ விபத்து ஏற்பட்டதுடன், ஜீன் 02ம் திகதி முதல் கடலுக்குள் மூழ்க ஆரம்பித்தது.



கொரோனா பரவலின் உச்சக்கட்டத்தில் சிக்கித்தவிக்கும் இலங்கையின் இன்றைய பேசு பொருளாக எம் வி எக்ஸ் பிரஸ் பேர்ள் என்கிற கப்பல் மாறியிருக்கிறது. கப்பலில் ஏற்பட்ட தீயினால் இலங்கைக் கடல் மாசுபட்டிருக்கிறது என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

கப்பலில் இருந்த பிளாஸ்டிக் துணிக்கைகள் கடலில் நீண்டகாலம் நீடித்திருக்கக்கூடியவை. இந்தியா, மாலைத்தீவு, இந்தோனேஷியா மற்றும் சோமாலியா போன்ற நாடுகளுக்கும் இவை மிதந்து செல்லலாம் என்றும் கூறப்பட்டிருக்கிறது. இலங்கை எதிர்கொண்டுள்ள மிக மோசமான சுற்றாடல் அழிவு இதுவாகும்.

கப்பலின் இரசாயன பொருட்களால் கடல் வாழ் உயிரினங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மனித குலத்தின் அசமந்தப் போக்குகளாலும் செயற்பாடுகளாலும் ஒவ்வொரு மணித்துளியும் நீர் அசுத்தமாக்கப்படுகிறது. சமுத்திரங்கள் குப்பை கூழங்களால் நிரம்பி வழிகின்றது. கடல் வாழ் உயிரினங்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. நாளுக்கு நாள் இவ் கடல் வாழ் உயிரினங்கள் இறந்துபோகும் துர்ப்பாக்கிய நிலையை நாம் காண்கிறோம். "நீர் இன்றி அமையாது உலகம்" என்பது திருவள்ளுவரின் கூற்று. இயற்கை சமநிலையற்றுசீர்குலைந்தசுற்றுச்சூழல் மனிதனுக்கு கிடைக்கின்ற நீரின் அளவையும் தரத்தையும் பாதிக்கிறது. இன்று உலகில் 21 பில்லியன் மக்கள் வீட்டில் பாதுகாப்பான குடிநீர் இல்லாமல் வாழ்வதாக தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

ஐக்கிய நாடுகள் சபை 1992 மார்ச் மாதம் சர்வதேச உலக நீர் தினமாக அறிவிக்கப்பட்டது. ஜீன் மாதம் 08ம் திகதி உலக சமுத்திர தினமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பூமியில் 30 சதவீதம் மட்டுமே நிலப்பகுதி. மீதமுள்ள 70 சதவீதம் நீர்ப்பரப்புதான். 70 சதவீத பரப்பளவு நீர் இருந்தாலும் அதில் 97.5 சதவீதம் கடலில் இருக்கும் உப்பு நீர்தான். மீதியுள்ள 2.5 சதவீத அளவிற்கே நிலத்தடி நீர் உள்ளது. இந்த நீரைத்தான் உலக மக்கள் விவசாயத்திற்கும் தங்களுடைய தேவைக்கும் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலையில், மனிதர்களாகிய நாம் நீரை அசுத்தமாக்கும் செயற்பாடுகளை இன்னமும் கைவிடவில்லை. சமுத்திரங்களின் முக்கியத்துவம் குறித்து நாம் இன்னமும் சிந்திக்கவில்லை.

கடற்பரப்புக்கள் குப்பைகளாலும் இரசாயனங்களாலும் நிரம்பியிருக்கிறது. இதனால் மிக சொற்ப அளவில் உள்ள குடிநீரும் பாதிப்புக்குள்ளாகி வருவது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் பிரதானமான துறைமுகங்களில் இந்த கொழும்புத் துறைமுகமும் ஒன்று. பல சர்வதேச நாடுகளினால் குறிவைக்கப்பட்டிருக்கும் ஒரு பரபரப்பான துறைமுகம். சீ-னாவின் பாரிய நிதி உதவியுடன் போர்ட் சிற்றி என்கிற துறைமுக நகரம் அமைக்கப்பட்டு வருவது இன்னும் இத்துறைமுகத்திற்கு அதிகூடிய சிறப்பினைச் சேர்த்திருக்கிறது. இதுவே தற்போது உலக நாடுகளை இத்துறைமுகம் நோக்கி திரும்பிப்பார்க்கவும் வைத்துள்ளது எனலாம். இந் நிலையில் தான் திடீரென இலங்கையின் கொழும்புத் துறைமுகக் கடற்பரப்பில் கப்பலொன்று தீப்பற்றி எரிந்து முடிந்திருக்கிறது. வாக்குமூலங்கள், விசாரணைக்காக குழுக்கள், ஏற்பட்டிருக்கும் சுற்றுச்சூழல் பாதிப்புக்கள் குறித்து கள ஆய்வுகள், கடலில் எண்ணெய் கசிவு தொடர்பான ஆய்வுகள், எரிந்து முடிந்த கப்பலில் இருந்த சிதைந்த பாகங்களை அகற்றும் பணிகள் என விரிவாக வேலைத்திட்டங்களும், கடற்படை மற்றும் புலனாய்வுப் பிரிவினர், பொலிசார், நீதிமன்ற விசாரணைகள் என பல கோணங்களில் அனைத்து செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பல வழக்குகளும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

அதேநேரம், நாட்டின் கரையோரப் பகுதிகளில் உயிரிழந்த நிலையில் கடலாமைகள், மீன்கள், டொல்பின்கள் என கரையொதுங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



இதே வேளை, செய்மதி தொழில்நுட்பத்தினூடாக பெறப்பட்ட நிழற்படங்களை மேற்கோள் காட்டி, எண்ணெய்க் கசிவு ஏற்படுவதாக செய்திகள் வெளிவர ஆரம்பித்துள்ளன. தீப்பற்றிய கப்பல் மூழ்கியுள்ள கடல் பிராந்தியத்தில்பாரியளவில்எண்ணெய்ப் படலம் காணப்படுகின்றமை தெரிய வந்துள்ளது. இவ் கப்பல் தீப்பற்றல் தொடர்பாக விரிவான விசாரணைகள் பாரபட்சமின்றி நடத்தப்படவேண்டும். இத் துறைமுகத்தினை நம்பி வாழும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கையின்கடல்சுற்றுச்சூழல்பெரும் அச்சுறுத்தலை எதிர்கொண்டிருக்கிறது. சமுத்திரம் மாசுபட்டிருக்கிறது. கடல் வாழ் உயிரினங்கள் இரசாயனக் கழிவு களால்மரணித்திருக்கின்றன.கரையோர நாடுகள் கூட அச்சமடைந்துள்ளன. நாம் பொறுப்புணர்ந்து செயற்படுவது எப்போது?

**சசிகரன்**




# பிராந்தியச் செய்திகள்



## மிருசுவில் பிள்ளையார் ஆலயத்தை மோதிய டிப்பர் வாகனச் சாரதி கைது



யாழ். கொடிகாமத்துக்கும் மிருசுவிலுக்கும் இடைப்பட்ட பகுதியிலுள்ள ஆலடி பிள்ளையார் ஆலயத்தின் முன்னால் வீதியோரத்தில் அமைந்துள்ள வழிபாட்டுத் தலத்தை இடித்துவிட்டு தப்பிச்சென்ற டிப்பர் வாகனமொன்று தேடப்பட்டு வந்த நிலையில் கொடிகாமம் பகுதியில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த புத்தசாசன மத மற்றும் கலாசார விவகாரங்களுக்கான அமைச்சர் பிரதமரின் இந்துமத விவகாரங்களுக்கான இணைப்பாளர் சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபுசர்மா

கொடிகாமம் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி சி.ஜ. எதிரிசிங்கவுடன் நான் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது, உரிய வாகனச் சாரதி கைது செய்யப்பட்டதாகவும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார் எனவும் என்னிடம் தெரிவித்திருந்தார்.

மேலும், ஆலய நிர்வாகத்தினர் சேதமடைந்த பகுதியை நிர்மாணிக்க ஆயத்தமாகி வருகின்றபோதிலும் நீதிமன்ற விசாரணையின் பின்னர் இதற்கான நஷ்டாட்டை உரிய தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

## வர்த்தமானியின் பிரகாரம் 1000 ரூபா சம்பளம் வழங்கப்பட வேண்டுமென பெருந்தோட்ட கைக்காசு தொழிலாளர்கள் வலியுறுத்தல்

பெருந்தோட்டங்களில் பதிவு செய்யப்படாத சமயாசமய தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளம் ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டுமென தொழில் திணைக்களம் அறிவித்துள்ள போதிலும் இதுவரை 700 ரூபா சம்பளமே வழங்கப்படுவதாக அக்கரப்பத்தனையிலுள்ள கைக்காசுத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

பெருந்தோட்டங்களில் கைக்காசுக்கு வேலை செய்பவர்கள் என அழைக்கப்படும் சமயாசமயத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா நாளாந்த சம்பளம் இதுவரை நேர்த்தியாக வழங்கப்படவில்லை என தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

நுவரெலியா மாவட்டம் அக்கரப்பத்தனையிலுள்ள கிரன்லி கீழ் பிரிவு, ஊட்டுவள்ளி, சின்னத்தோட்டம் உள்ளிட்ட தோட்டங்களில் தொழில்புரியும் தமக்கு நாளாந்த சம்பளமாக 700 ரூபாவே வழங்கப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த மார்ச் மாதம் 5 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம், பெருந்தோட்டங்களில் பதிவு செய்யாமல் தொழில் புரியும் சமயாசமயத் தொழிலாளர்களுக்கும் ஆயிரம் ரூபா நாள் சம்பளம் வழங்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்து, தொழில் ஆணையாளர் நாயகத்தினால் பிராந்தியங்களிலுள்ள பெருந்தோட்டக் கம்பனிகளின் உரிமையாளர்களுக்கு இது தொடர்பில் கடிதமொன்றின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

பதிவு செய்யப்படாத சமயாசமய தொழிலாளர்களுக்கு சில பகுதிகளில் 1000 ரூபா நாளாந்த சம்பளம் வழங்கப்படுவதில்லை என சுமத்தப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் தொழில் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தியிடம் வினவிய போது, 1000 ரூபா சம்பள விவகாரம் தொடர்பில் நீதிமன்றத்தில் தற்போது வழக்கு விசாரணையில் உள்ளமையினால், பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத அனைத்து ஊழியர்களுக்கும் கட்டாயம் 1000 ரூபா வழங்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இந்த முறைப்பாடு தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை ஜூன் 21 வரை தொடர அரசாங்கம் தீர்மானம்




தற்போது நடைமுறையிலுள்ள பயணக் கட்டுப்பாடுகளை எதிர்வரும் ஜூன் 21ஆம் திகதி அதிகாலை 4.00 மணி வரை நீடிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 14ஆம் திகதி கட்டுப்பாடு தளர்த்தப்படாது என்பது குறிப்பிடத்தக்கது.

## போக்குவரத்து கட்டுப்பாடுகளை மேலும் கடுமையாக்கவேண்டும்

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள போக்குவரத்து கட்டுப்பாடுகளை மேலும் கடுமையான விதத்தில் நடைமுறைப்படுத்தவேண்டும் என மருத்துவநிபுணர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. மருத்துவநிபுணர்கள் சங்கத்தின் தலைவர் லக்குமார் பெர்ணான்டோ இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.



போக்குவரத்துகட்டுப்பாடுகளை மேலும் இறுக்கமாக நடைமுறைப்படுத்தாவிட்டால் நோயாளிகளினதும் உயிரிழப்பவர்களினதும் எண்ணிக்கை குறைவடையும் என எதிர்பார்க்கமுடியாது என அவர் தெரிவித்துள்ளார். நிறுவனமொன்று எத்தனை ஊழியர்களை வேலைக்கு அழைக்கலாம் என்பது குறித்து கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டும் என தெரிவித்துள்ள அவர் இதன் மூலம் வீதிகளில் காணப்படும் மக்களின் எண்ணிக்கையை குறைக்க முடியும்.என தெரிவித்துள்ளார். உணவு மற்றும் அத்தியாவசிய பொருள் விநியோக சேவைகளை விஸ்தரிக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## முல்லைதீவு மாவட்டத்தில் 15மோட்டார் குண்டுகள் மீட்பு!

முல்லைத்தீவு மாவட்டத்தின் காட்டுப்பகுதியில் மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



கிளிநொச்சி பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து குறித்த இடத்தில சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது அங்கிருந்து செயலிழக்காத நிலையில் காணப்பட்ட 15 மோட்டார் குண்டுகள் கண்டறியப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து விசேட அதிரடிப்படையினருக்கு தகவல் வழங்கப்பட்டு மோட்டார் குண்டுகள் மீட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

## எரிபொருள் விலை அதிகரிப்பு: ஜனநாயக ரீதியாக நாட்டை ஆள முடியாதா என சஜித் கேள்வி

எரிபொருள் விலை அதிகரிப்பு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அரசாங்கத்தைத் கடுமையாக சாடியுள்ளார்.



இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் திருத்தப்பட்ட புதிய எரிபொருள் விலைகளை அன்று (வெள்ளிக்கிழமை) நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் அறிவித்திருந்தது.

இந்த அரசாங்கம் தொடர்பாக வெட்கமடைவதாகவும் இது முழு நாட்டிற்கும் ஒரு துன்பகரமான நிகழ்வு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயகரீதியாக நாட்டை ஆள முடியாது என்பதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியால் மட்டுமே இந்த நாட்டிற்கு செழிப்பையும் வளர்ச்சியையும் கொண்டு வர முடியும் என்றும் சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டியுள்ளார்.

## எரிபொருட்களின் விலை அதிகரிப்பு!

அன்று (11) நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் CEYPETCO எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்தது.



இதன்படி, ஒக்டெய்ன் 92 ரக பெட்ரோல் ஒரு லிட்டரின் விலை 20 ரூபாவாலும் ஒக்டெய்ன் 95 ரக பெட்ரோல் ஒரு லிட்டரின் விலை 23 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒரு லிட்டர் டீசல் 7 ரூபாவாலும், சுப்பர் டீசல் 12 ரூபாவாலும் ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் விலை 7 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.




# பிரபல நடிகரின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் தல அஜித் மற்றும் நடிகை த்ரிஷா!

நடிகர் சிம்பு தற்போது தமிழ் சினிமாவின் முன்னணி நடிகராக விளங்குபவர், இவர் தொடர்ந்து அடுத்தடுத்த திரைப்படங்களில் கமிட்டாகி நடித்து வருகிறார்.

அந்த வகையில் ஈஸ்வரன் படத்தை தொடர்ந்து சிம்பு இயக்குனர் வெங்கட் பிரபு இயக்கத்தில் மாநாடு திரைப்படத்தில் நடித்து முடித்துள்ளார்.

இப்படத்தின் ட்ரைலர் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்ற நிலையில், முதல் சிங்கள் விரைவில் வெளியாகவுள்ளது.

இந்நிலையில் இவரின் பழைய பிறந்தநாள் கொண்டாட்ட புகைப்படம் ஒன்று வெளியாகியுள்ளது. அதில் தல அஜித் அவரின் மனைவி ஷாலினி மற்றும் த்ரிஷா உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளனர்.

மேலும் இந்த புகைப்படத்தை பார்க்கும் போது வினைத்தாண்டி வருவாயா படத்தின் போது எடுக்கப்பட்டது போல் உள்ளது.



# பிக்பாஸ் சீசன் 5 எப்போது? – வெளியான புதிய தகவல்

தமிழ் பிக்பாஸ் நிகழ்ச்சி, இதுவரை நான்கு சீசன்கள் முடிவடைந்துள்ள நிலையில், 5-வது சீசன் எப்போது தொடங்கப்படும் என்பது குறித்த தகவல் வெளியாகி உள்ளது.

தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மிகவும் பிரபலமானது பிக்பாஸ் நிகழ்ச்சி. இந்நிகழ்ச்சியை நடிகர் கமல்ஹாசன் தொகுத்து வழங்கி வருகிறார். இதுவரை தமிழில் நான்கு சீசன்கள் முடிந்துள்ளன. முதல் சீசனில் ஆரவ், இரண்டாவது சீசனில் ரித்விகா, மூன்றாவது சீசனில் முகின், நான்காவது சீசனில் ஆரி ஆகியோர் பிக்பாஸ் டைட்டிலை ஜெயித்தனர்.

வழக்கமாக பிக்பாஸ் நிகழ்ச்சி ஜூன் மாதத்தில் தொடங்கி அக்டோபர் வரை நடத்தப்படும். ஆனால் கடந்தாண்டு கொரோனா பரவல் காரணமாக லாக்டவுன் போடப்பட்டதால், பிக்பாஸ் 4 நிகழ்ச்சி திட்டமிட்டபடி ஜூன் மாதம் தொடங்கப்படவில்லை. பின்னர் அக்டோபர் மாதம் தொடங்கி இந்தாண்டு ஜனவரி 16-ந் திகதி வரை 'பிக்பாஸ் 4' நடைபெற்றது.

இந்நிலையில், கொரோனா 2-வது அலை பரவல் காரணமாக பிக்பாஸ் சீசன் 5 நிகழ்ச்சியும் தள்ளிவைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. கடந்தாண்டை போலவே இந்தாண்டும் அக்டோபர் மாதத்தில் பிக்பாஸ் நிகழ்ச்சியை தொடங்க அதன் ஏற்பாட்டாளர்கள் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. வழக்கம்போல் இந்த சீசனையும் கமல்ஹாசன் தான் தொகுத்து வழங்க உள்ளாராம்.




# ஒரே நிறுவனத்தின் 5 படங்களில் நடிக்கும் சிவகார்த்திகேயன்

டாக்டர், அயலான், டான் ஆகிய படங்களை தொடர்ந்து நடிகர் சிவகார்த்திகேயன், ஒரே நிறுவனத்தின் 5 படங்களில் நடிக்க இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. தமிழ் சினிமாவில் முன்னணி நடிகராக வலம் வருபவர் சிவகார்த்திகேயன். இவர் நடிப்பில் தற்போது டாக்டர், அயலான், டான் ஆகிய படங்கள் உருவாகி வருகிறது.

இந்த நிலையில் சன் பிக்சர்ஸ் நிறுவனத்துக்கு தொடர்ச்சியாக 5 படங்களில் நடிக்க சிவகார்த்திகேயன் ஒப்புக் கொண்டுள்ளதாகவும், ஐந்து படங்களுக்கும் சேர்த்து ரூபாய் 75 கோடி அவருக்கு சம்பளமாக பேசப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. சன் பிக்சர்ஸ் நிறுவனம் தற்போது 'அண்ணாத்த', 'தளபதி 65', சூர்யா 40 ஆகிய படங்களை தயாரித்து வருகிறது.



# சூர்யாவை தொடர்ந்து சர்வதேச பட விழாவுக்கு தேர்வான நயன்தாரா படம்

ஷாங்காய் சர்வதேச திரைப்பட விழா ஜூன் 11 முதல் 20-ந் திகதி வரை நடைபெற உள்ளது, இதில் திரையிட இரண்டு தமிழ் படங்கள் தேர்வாகி உள்ளது. நடிகை நயன்தாரா தனது காதலர் விக்னேஷ் சிவனுடன் இணைந்து ரவுடி பிக்சர்ஸ் என்ற பட நிறுவனத்தை தொடங்கி திரைப்படங்களை தயாரித்து வருகிறார். இவர்கள் தயாரிப்பில் 'நெற்றிக்கண்', 'காத்துவாக்குல ரெண்டு காதல்' போன்ற படங்கள் உருவாகி வருகிறது. இதுதவிர பி.எஸ்.வினோத்ராஜ் இயக்கத்தில் உருவாகி உள்ள 'கூழாங்கல்' படத்தையும் தயாரித்துள்ளார் நயன்தாரா. இப்படம் சர்வதேச பட விழாக்களில் கலந்துகொண்டு விருதுகளை வென்று வருகிறது.

ஏற்கனவே நெதர்லாந்தில் நடந்த ரோட்டர்டம் சர்வதேச திரைப்பட விழாவில் போட்டி பிரிவில் திரையிடப்பட்டு சிறந்த படத்துக்கான விருதை பெற்றது. ரோட்டர்டாம் சர்வதேச விழாவில் விருது பெற்ற முதல் தமிழ் படம் 'கூழாங்கல்' என்பது குறிப்பிடத்தக்கது. பின்னர் நியூயார்க்கில் நடந்த டைரக்டர்ஸ் நியூ திரைப்பட விழாவிலும் 'கூழாங்கல்' திரையிடப்பட்டு சிறந்த திரைப்படத்துக்கான விருதை வாங்கியது.

இந்நிலையில், சீனாவில் நடைபெற உள்ள ஷாங்காய் சர்வதேச திரைப்பட விழாவில் திரையிட 'கூழாங்கல்' திரைப்படம் தேர்வாகி உள்ளது. நாளை தொடங்க உள்ள இவ்விழா, ஜூன் 20-ந் திகதி வரை நடைபெற உள்ளது. ஏற்கனவே, நடிகர் சூர்யா நடித்துள்ள 'சூரரைப் போற்று' திரைப்படமும் இவ்விருது விழாவில் திரையிட தேர்வாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.



தொகுப்பு :- ஹாசினி




## கரட் ஜீஸ் செய்வது எப்படி? அதன் பலன்கள் என்ன?

கரட்டில் உள்ள 'ஏ' வைட்டமின் கண் பார்வைக்கு நல்லது. கரட்டுக்கு மஞ்சள் நிறத்தை அதிலுள்ள பீட்டா கராட்டின் என்ற அமிலம்தான் தருகிறது. அந்த பீட்டா கரட்டின்தான் மனித கண்களில் புரை வராமல் பாதுகாக்கிறது. தினமும் ஒரு கரட் சாப்பிட்டால் உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகளை அகற்றலாம், குடல் புண்கள் வராமல் தடுக்கலாம். மஞ்சள் முள்ளங்கி என அழைக்கப்படும் கரட் பற்றியும் அதன் பலன்கள் பற்றியும் அறிந்து கொள்வோம்.

ஜீஸ் செய்வது எப்படி?

தேவையான பொருட்கள்:
கரட் – 4
எலுமிச்சை – 1/2 (சாறு எடுத்துக் கொள்ளவும்)

செய்முறை:– முதலில் கரட்டை நன்கு நீரில் கழுவி, அதன் தோலை நீக்கிவிட்டு, துண்டுகளாக்கிக் கொள்ள வேண்டும். பின்னர் அதனை மிக்ஸியில் போட்டு நன்கு அரைத்துக் கொள்ள வேண்டும். பிறகு அதனை வடிகட்டி, பின் அதில் எலுமிச்சை சாற்றினை ஊற்றி கலந்து பரிமாறினால் மிகவும் சுவையாக இருக்கும்.

பயன்கள்

உயிர் சத்துகள் நிறைந்த கரட்டை பச்சையாக உண்பது நல்லது. நார்ச்சத்து மற்றும் பொட்டாசியம் சத்துகளும் நிறைந்துள்ளதால் ஜீரணத்திற்கு உதவுகிறது. மாலைக் கண் நோயை தடுக்கும். ரத்தத்தில் உள்ள கொழுப்புச்சத்தை குறைக்கவும், புற்று நோயிலிருந்து காக்கவும் கரட் உதவுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ரத்தத்தை சுத்தப்படுத்தவும், விருத்திச் செய்யவும் பயன்படுகிறது. வாய் துர்நாற்றத்தை போக்கும். குடல் புண்கள் வரமால் தடுக்கும். ஆண்மை சக்தியை அதிகரிக்கும் தன்மை நிறைந்து காணப்படுகிறது. அதாவது பாதி வேகவைத்த முட்டையுடன் கரட் மற்றும் தேன் கலந்து சாப்பிட்டு வர நல்ல பலன்கள் கிடைக்கும்.

கரட்டை பசும் பாலில் காய்ச்சி, காய்ந்த திராட்சை பழம் சேர்த்து தேன் கலந்து பயன்படுத்தினால் உடல் வலுப்பெறும். நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். கரட்டை எலுமிச்சை சாறு சிறுது கலந்து சாப்பிட்டு வர பித்த கோளாறுகள் நீங்கும். உருளைக் கிழங்கை விட 6 மடங்கு அதிக சுண்ணாம்புச்சத்து நிறைந்துள்ளதால் உணவுகள் எளிதில் ஜீரணமாகும். எலும்புகள் உறுதியாகும்.

முதுமையில் கால்சிய இழப்பை சரிகட்ட அன்றாடம் உணவில் கரட்டை சேர்த்துக்கொண்டால் எலும்பு, பற்கள் பலப்படும். தலைமுடி உதிர்வதை தடுக்கும் ஆற்றல் கரட்டுக்கு உள்ளதாகவும் ஆராய்ச்சிகள் தெரிவிக்கிறது.

பெண்களுக்கு மெனோபாஸ் காலங்களில் ஏற்படும் விட்டமின் இழப்பை சரிசெய்ய கரட் மிகவும் சரியான ஊட்டசத்து என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. பெண்களுக்கு மாதவிலக்கின்போது உண்டாகும் அதிக உதிரப்போக்கை கட்டுப்படுத்தும் தன்மை உள்ளது.

கருவுற்ற பெண்கள் தினமும் 25 கிராம் அளவு கரட்டை பச்சையாகவோ அல்லது சமைத்தோ சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல், போலி வலிகள், களைப்பு ஏற்படாது. சோகை நீங்கும். பிறக்கும் குழந்தை நிறமாகவும், வலுவாகவும் பிறக்கும். சருமத்திற்கு பொலிவையும், தலைச்சுற்றல், மயக்கம் போன்றவற்றை தடுக்கும் ஆற்றலும் நிறைந்துள்ளது. கண் புகைச்சல், கண்ணில் பாசி படிதல், மாலைக் கண் போன்றவற்றை குணமாக்கும்.

கரட்டின் மேல் தோல் நீக்கி சிறுசிறு துண்டுகளாக நறுக்கி அல்லது திருகி அதனுடன் சின்ன வெங்காயம், பச்சைக் கொத்தமல்லி, இஞ்சி, பச்சை மிளகாய் சிறிது சேர்த்து மோரில் ஊறவைத்து மதிய உணவு வேளைகளில் உண்டு வந்தால் வாயு மற்றும் வயிறு சம்பந்தப்பட்ட நோய்கள் நீங்கும்.

கரட் சாறுடன் பாதாம் பருப்புகள் உண்டு வந்தால், மூளை விழிப்புடன் இருக்கும். மஞ்சள் காமாலை சீக்கிரம் குணமாக தினமும் கரட் சாறு அருந்துவது நல்லது. வயிற்றில் பூச்சிகளை மருந்தின்றி வெளியேற்றும், தோல் வரட்சி நீங்கி பளபளப்பாகும், முகப்பரு பருக்கள் மறைந்து சிவப்பழகு கூடும். தரமான தாய்ப்பால் தொடர்ந்து கிடைக்க கரட் சாறு அருந்தலாம்.

ரத்தத்தில் தேவையில்லாத யூரிக் அமிலத்தை கட்டுப்படுத்துகிறது. இதனால் மூட்டுவீக்கம், வாத நோய்கள் தீரும். மலட்டுத் தன்மையை மாற்றும் வைட்டமின் 'ஈ' நிறைந்து காணப்படுகிறது. கரட்டைக் கடித்து உண்பதால் உமிழ்நீர் அதிகமாகச் சுரந்து செரிமானத்தை அதிகரிக்கிறது. நாம் தினமும் ஒரு கரட் உண்டு வர குடல்புண், வயிற்றுவலி, அஜீரணம் ஆகியவற்றில் இருந்து விடுதலை கிடைக்கும்.

கரட் ஜூஸ் உடம்பிற்கு குளிர்ச்சி ஏற்படுத்துவதால், மதிய வேளைகளில் அருந்தலாம். கோடைக் காலத்தில் உடல் சூடு தணிய, நிறைய கரட் ஜூஸ் பருகலாம். சளித்தொல்லை உள்ளவர்கள் அதிலிருந்து விடுபட்ட பின்னரே ஜூஸை குடிக்க வேண்டும். கரட் லேசான இனிப்பும், பசியைத் தூண்டுவதாகவும், நீர் இளக்கியாகவும் செயல்படும் தன்மை கொண்டது.

வயிற்றுக் கடுப்பு, வயிற்றில் பூச்சித் தொல்லைகளுக்கும் மருத்துவ ரீதியான பலன்களைத் தந்து உதவுகிறது. இருமலைப் போக்கும். இதை மிக அதிகமாகத் தின்றால் பித்தமாகும். நீண்டகாலமாக அல்சர்' உள்ளவர்கள், காரம் சாப்பிட்டதால் வயிற்று வலி வருபவர்கள் கரட்டை நன்கு பிழிந்து சாறு எடுத்து வாரம் மூன்று தடவை வீதம் இரண்டு மாதங்கள் சாப்பிட்டால், வயிறு மற்றும் குடல் சம்பந்தமான நோய்கள் குணமடையும். மறுபடியும் அதுபோன்ற பாதிப்புகள் ஏற்படாமலும் தடுத்துவிடும்.

கரட்டில் நார்ச்சத்து அதிகம் உள்ளதால் மிகுந்த நன்மை அளிப்பதுடன், செரிமானத்தைத் தூண்டி நல்ல ஜீரண சக்தியையும் அளிக்கிறது. கரட்டை பச்சையாகவே சாப்பிடலாம் என்பது இதன் சிறப்பு. பற்களில் கறை உள்ளவர்கள் அடிக்கடி கரட்டை பச்சையாக மென்று சாப்பிட்டால் அந்தக் கறை மறைந்துவிடும்.

## கோடையில் சருமத்தை பொலிவாக்கும் சந்தன ஃபேஸ் பேக்

பெண்களுக்கு இந்த கோடை காலத்தில் தோல் வறட்சி, அலர்ஜி போன்ற பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இயற்கை பொருள்களை வைத்து செய்யப்படும் மருத்துவம் நல்ல தீர்வை தரும். மேலும் சருமத்தில் ஏற்படும் பிரச்சனைகளை எளிதில் நீக்கவும் வல்லது.

சந்தனப் பொடியில் தக்காளியை அரைத்து கலந்து, வேண்டுமெனில் சிறிது முல்தானி மெட்டியையும் சேர்த்து கலந்து, முகத்திற்கு ஃபேஸ் பேக் போடலாம்.

எலுமிச்சை சாற்றுடன் சந்தனப் பொடியை சேர்த்து கலந்து, முகத்திற்கு ஃபேஸ் மாஸ்க் போட்டால், சருமத்தில் உள்ள இறந்த செல்கள் நீங்குவதோடு, பருக்கள் வராமலும் இருக்கும்.

தயிரை சந்தனப் பொடியில் சேர்த்து கலந்து, முகத்திற்கு மாஸ்க் போட்டால், சருமம் மென்மையாவதோடு, வெள்ளையாகும்.

முட்டையை நன்கு அடித்து, தேன் மற்றும் சந்தனப் பொடியை சேர்த்து கலந்து, முகத்தில் தடவி ஊற வைத்து கழுவினால், சருமத்தில் உள்ள சுருக்கங்கள் நீங்கி, அழுக்குகள் அனைத்தும் வெளியேறி, சருமம் அழகாக இளமையுடன் காணப்படும்.

சந்தனப் பொடியை மஞ்சள் தூள், ஒரு துளி எலுமிச்சை சாறு மற்றும் பால் ஊற்றி கலந்து, சருமத்தில் தடவி ஊற வைத்து கழுவ வேண்டும். இதனால் முகமானது பொலிவோடு காணப்படும்.

பொதுவாக சந்தன ஃபேஸ் பேக்கில், சந்தனப் பொடியை ரோஸ் வாட்டரில் கலந்து, சருமத்திற்கு தடவி ஊற வைத்து கழுவினால், சருமத்தில் உள்ள அழுக்குகள் மற்றும் இறந்த செல்கள் நீங்கி, சருமம் பொலிவோடு காணப்படும்.



## சுவையான இறால் வறுவல் செய்ய..!!

தேவையான பொருட்கள்:

இறால் – கால் கிலோ
இஞ்சி பூண்டு பேஸ்ட் – 2 ஸ்பூன்
கடலை மாவு – 2 ஸ்பூன்
மிளகு தூள் – 2 ஸ்பூன்
சில்லி பவுடர் – ஒரு ஸ்பூன்
உப்பு தேவையான அளவு
கொத்தமல்லி – தேவையான அளவு
கருவேப்பிலை – தேவையான அளவு
கடலை எண்ணெய் – அரை லிட்டர்

செய்முறை:
இறாலை சுத்தம் செய்து கொள்ள வேண்டும். இறால் உடன் கடலைமாவு, மிளகுத்தூள் இஞ்சி பூண்டு பேஸ்ட், சில்லி பவுடர், தேவையான அளவு உப்பு, இதை அனைத்தையும் நன்றாக பிசைந்து பத்து நிமிடங்கள் ஊற வைக்கவும். 10 நிமிடம் கழித்து, கடாயில் உள்ள எண்ணெய்யில் போட்டு பொரித்து எடுத்தால் ருசியான இறால் வறுவல் தயார்.



தொகுப்பு :- ஹாசினி



பீட்டர் டஸாக், பெர்ஜர் சோரன்சன் , ஆங்கஸ் டேல்க்ளெஷ்

05 ஆம் பக்க தொடர்ச்சி...

இந்த அமைப்பின் வழியாக அமெரிக்க அரசு 34 லட்சம் டாலர் நிதி யுதவியை வூஹான் ஆய்வுக்கூடத்துக்குக் கொடுத்திருக்கிறது.

வூஹான் ரகசியங்கள் அனைத்தும் அறிந்த இவர், 'கொரோனா இயற்கையான வைரஸ்தான்' என்று பிரசாரம் செய்துவருகிறார்.

வூஹான் ஆய்வுக்கூடத்தை ஆராய்வதற்காக உலக சுகாதார நிறுவனம் ஒரு குழுவை அனுப்பியது. இதற்கு ஒரு நிபுணரைப் பரிந்துரைக்குமாறு அமெரிக்க அரசிடம் உலக சுகாதார நிறுவனம் கேட்டது. அமெரிக்க அரசு மூன்று பெயர்களைப் பரிந்துரை செய்தது.

கடைசியில் குழுவில் இடம் பெற்றவர், அந்த லிஸ்ட்டிலேயே இல்லாத பீட்டர் டஸாக். அரைகுறையாக ஆய்வு செய்துவிட்டு, 'ஆய்வுக்கூடத்திலிருந்து கொரோனா வைரஸ் கசிந்திருக்க வாய்ப்பு மிகக் குறைவு' என அறிக்கை கொடுத்தது அந்தக் குழு.

'உயிரி ஆயுதங்கள் குறித்து அமெரிக்காவும் ஏராளமான ஆராய்ச்சிகளைச் செய்கிறது. உலகத்தின் நலனுக்காக இந்த ஆய்வுகள் பற்றிய உண்மைகளை எல்லா நாடுகளும் வெளியிட வேண்டும்' என அக்கறையுள்ள விஞ்ஞானிகள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.

**கொரோனா வைரஸ் இயற்கையானது இல்லை!**

பிரிட்டிஷ் பேராசிரியர் ஆங்கஸ் டேல்க்ளெஷ், நார்வே விஞ்ஞானி பெர்ஜர் சோரன்சன் ஆகியோர் இணைந்து செய்த கொரோனா ஆய்வு, அதிர வைக்கும் பல விஷயங்களை அம்பலப்படுத்துகிறது.

**'வௌவால்களில் இருந்த வைரஸை எடுத்து, அதில் ஸ்பைக் புரதத்தை இணைத்து ஆபத்தானதாகவும், அதிகம் பரவுவதாகவும் மாற்றியுள்ளனர். இயற்பியல் விதிகளின்படி பாசிட்டிவ் சார்ஜ் உள்ள நான்கு அமினோ அமிலங்கள் ஒரே வரிசையில் இருக்காது. கொரோனா வைரஸின் ஸ்பைக் புரதத்தில் இப்படி இருக்கிறது. ஆய்வுக்கூடத்தில் செயற்கையாகச் செய்தால் மட்டுமே இது சாத்தியம்" என்கிறார் சோரன்சன்.**

**'இயற்கையான ஒரு வைரஸ் தொற்று நாளுக்கு நாள் வேகமாகப் பரவும். ஆனால், அந்த வைரஸ் உருமாறி வீரியம் இழக்கும். கொரோனா வைரஸோ வீரியம் அதிகமாகிக்கொண்டே போகிறது. இதற்கும் காரணம், சீனா செய்த இன்னொரு வேலை தான். ஆய்வுக்கூடத்திலிருந்து கசிந்து மனிதர்களுக்குப் பரவிய வைரஸை மீண்டும் எடுத்து, ரெட்ரோ இன்ஜினீயரிங் முறையில் அதைஇயற்கையானதுபோலமாற்றியுள்ளனர். அதுதான் உலகம் முழுக்கப் பரவியிருக்கிறது" ஆபத்தானது என்பது குறிப்பிடத்தக்கது**

# படித்ததில் பிடித்தது..

ஆற்றங்கரை ஓரமாக வந்துகொண்டிருந்த வழிப்போக்கன்
ஒருவனுக்கு வைரக்கல் ஒன்று கண்ணில் பட்டது..

அது வைரம் என்றறியாமல்,
விலை போகுமா என்ற
சந்தேகத்துடன் கடைத்தெருவுக்கு எடுத்து வந்தான்..

அவன் கையில் வைரம் இருப்பதைப் பார்த்த வியாபாரி ஒருவன்,
இருபது ரூபாய்க்கு தன்னிடம் அதை விற்குமாறு கேட்டான்..

ஆனால் வழிபோக்கனோ பேரம் பேசித்தான் பார்ப்போமே என்ற
எண்ணத்துடன் 25 ரூபாய் கேட்டான்..

ஐந்து ரூபாய் அதிகம்
கொடுக்க விரும்பாத அந்த வியாபாரியும் 20
ரூபாய்க்கு பேரம் பேசினான்..

இதைக் கவனித்த
மற்றொரு வியாபாரி 25 ரூபாய் கொடுத்து அந்த வைரத்தை வாங்கிக்கொண்டு சென்றான்..

ஆத்திரமடைந்த வியாபாரி,
அந்த வழிப்போக்கனை பார்த்து, "அட
முட்டாளே! அதன் மதிப்பு பல ஆயிரம் பெறும்... அறிவில்லாமல்
விற்றுவிட்டாயே!" என்று திட்டினான்..

அதற்கு அவன், "அந்தக் கல்லுக்கு என்னுடைய
மதிப்பு அவ்வளவுதான்..
ஆனால் அது வைரம், அதன் மதிப்பு தெரிந்தும் அதைத் தவறவிட்ட நீ தான் மிகப்பெரிய
முட்டாள்" என்றான்..

சிலர் இப்படித்தான் உண்மையான மதிப்பு தெரிந்தும்,
கிடைத்ததை விட்டுவிட்டுத் தவிக்கிறார்கள்.

# விவேகானந்தரின் பொன்மொழிகள்

இருதயம் விரிவடைந்துள்ள இடத்தில்தான் உண்மை ஞானம் உதிக்கும். அந்த உண்மை ஞானம்தான் நம்பிக்கை.

அடக்கப்படாமல் உள்ள மனமும், அறவழியில் செலுத்தப்படாத மனமும் நம்மை எப்போதும் கீழ் நோக்கியே இழுத்துச் சென்று அழித்துவிடும். அடக்கப்பட்ட மனமும், அறவழியில் செல்லும் மனமும் நமக்குப் பாதுகாப்பை அளித்திடும். உலகபந்தங்களில் இருந்து விடுதலையளிக்கும்.

கபடம் இல்லாத நாத்திகன் வஞ்சகனை விடச் சிறந்தவன் ஆவான்.

காமம், பொன்னாசை இவைகளால் ஆளப்படும் அற்பர்கள் பொருட்படுத்தப்படக்கூடியவர்கள் அல்லர்.

எவர் ஒருவருடைய நெஞ்சு ஏழை மக்களுக்காகத் துயரத்தில் அழுமோ, அவரையே நான் மகாத்மா என்பேன்.

அன்பு நெறியிற் சென்று உலகம் உய்வடைந்திட வழிகளைக் கூறும் முறை மதம் எனப்படும்.

கோழைகளே பாவ காரியங்களைப் புரிந்திடுவர். தைரியமுடையோர் ஒருக்காலும் பாவம் செய்யார்.

பலமற்ற மூளையில் நாம் எதையுமே செய்ய இயலாது. அதனால் நாம் அதைப் பலப்படுத்த வேண்டும்.

அச்சமே நமக்குத் துயரத்தைத் தருவது. அச்சமே கேட்டை விளைவிப்பது. அச்சமே மரணத்தைத் தருவது. நமது உண்மை இயல்பை நாம் அறிந்து கொள்ளாமல் இருப்பதனால்தான் நமக்கு அச்சம் ஏற்படுகின்றது.

இவ்வுலகில் பிறந்த நீங்கள் அதற்கு அடையாளமாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். இல்லையேல் உங்களுக்கும் மரங்கள் கற்களுக்கும் வேறுபாடு இல்லாமற் போய்விடும்.

முதலில் வேலைக்காரனாயிருக்கக் கற்றுக் கொண்டால், எஜமானாகும் தகுதி பின்னர் தானாகவே வரும்.

அன்புடையவனே வாழ்பவன். சுயநலமுடையவனோ செத்துக் கொண்டிருக்கின்றான் என்றே பொருள்.

சேர்ந்து வாழ்தலே சிறந்த வலிமையாகும்.

எந்த வேலையாக இருந்தாலும் அதைத் தன் விருப்பத்திற்கு ஏற்றதாக மாற்றுபவனே அறிவாளியாவான்.

தன்னை அடக்கப் பழகிக்கொண்டவன் வேறு எதற்கும் சிக்கமாட்டான். அத்தகைய தகுதி உள்ளவனே உலகில் நன்றாக வாழத் தகுதியுள்ளவன்.

பலமே வாழ்வு, பலவீனமே மரணம்.

தூய்மை, பொறுமை, விடாமுயற்சி இவை மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். அத்துடன் இவை அனைத்துக்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.

உறுதியுடன் இரு, அதற்கு மேலாகத் தூய்மையானவனாகவும், முழு அளவில் சிரத்தை உள்ளவனாகவும் இரு

வலிமையின்மையே ஒருவனின் துன்பத்திற்கு காரணம். நாம் பலவீனமாக இருப்பதாலேயே பொய்யும் திருட்டும் ஏமாற்று வேலைகளும் இன்னும் நம்மை விட்டு அகலவில்லை.

வாழ்க்கையில் வெற்றி பெற்ற ஒவ்வொருவரும் பின்னணியில் ஏதோ ஓரிடத்தில்! அளவற்ற நேர்மையும் அளவற்ற சிரத்தையும் கொண்டவராக இருத்தல் வேண்டும். அந்த குணங்கள் தாம். அவர் அடைந்த சிறந்த வெற்றிகளுக்கு காரணமாகும்.

உலகில் உள்ள மக்கள் உன்னை புகழ்ந்தாலும் சரி இகழ்ந்தாலும் சரி நீ. உண்மை என்னும் பாதையிலிருந்து அணுவளவேனும் பிறழாமல் கவனமாக இருக்க வேண்டும்

மனிதப் பிறவிதான் பிரபஞ்சத்திலேயே மிகச் சிறந்ததாகும் எல்லா மிருங்களைக் காட்டிலும் எல்லாக் தேவர்களைக் காட்டிலும் மனிதர்களே உயர்ந்தவர்கள். மனிதர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் யாரும் இல்லை.

பணம் மட்டுமே வாழ்க்கையல்ல அதையும் தாண்டி மனிதன் அடைய வேண்டிய அனுபவங்கள் பல உள்ளன. மன நிம்மதி அன்பு தவம் தியானம் முதலிய குணங்கள் எல்லாம் பணத்தால் வருபவை அல்ல.

அவரவர் விதி அவரவர் கையிலேயே இருக்கிறது.

மற்றவர்களின் தெய்வீக இயல்பை வெளிப்படுத்த உதவி செய்வது தான். நம்முடைய தெய்வீக இயல்பை வெளிப்படுத்துவதற்கான ஒரே வழியாகும்.

பொய் சொல்வது சாதாரண விஷயம் அல்ல. அது ஒரு கலை. பொய் சொல்ல அசாத்திய திறமை வேண்டும். ஏராளமான ஞாபக சக்தி வேண்டும். ஆனால் பொய் சொல்லி பிறரை ஏமாற்றுபவர்கள் மற்ற ஏமாற்றுக்காரர்களாலேயே பாடம் பெறுவார்கள்.

துக்கம் என்பது அறியாமையின் காரணமாகத்தான் ஏற்படுகிறது. வேறு எதனாலும் அன்று.

கடலைக் கடக்கும் இரும்பு போன்ற மன உறுதியும் மலைகளையே துளைத்துச் செல்லும் வலிமை தோள்களுமே நமக்குத் தேவை. வலிமைதான் வாழ்வு பலவீனமே மரணம். மிகப்பெரிய இந்த உண்மையை உணந்து கொள்ளுங்கள்.

# ஓர் தமிழ்க் காதல் கதை!

இது ஒரு தனித்துவம் வாய்ந்த தமிழ் காதல் கதை. அது என்ன, 'தனித்துவம்' என்பதை, கடைசியில் சொல்கிறேன்.

என் நண்பன் வேலாயுதனின் மகள், செல்வியின் திருமணத்திற்குச் சென்ற போது, அங்கு எனக்கு எதிர்பாராத அதிர்ச்சி காத்திருந்தது. வேலாயுதனும், அவன் மனைவி மாதவியும், என்னை மிக அன்போடு வரவேற்று, காலைச் சிற்றுண்டி சாப்பிட, சாப்பாடு கூடத்திற்கு அழைத்துச் சென்று, வரிசையில் காலியாக இருந்த ஓரிடத்தில் அமரச் செய்து, உணவு உபசரிப்பவரைக் கூப்பிட்டு, 'பிரத்யேகமாக' கவனிக்கும்படி சொல்லிவிட்டுச் சென்றனர்.

ஓர் தமிழ்க் காதல் கதை! இட்லி, சர்க்கரைப் பொங்கல், வடை என, வகை வகையான உணவு வகைகளைச் சுவைத்தபடி, எதிர்வரிசையைக் கவனித்த எனக்கு, சற்றுத் தொலைவில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த அந்த அழகான பெண்மணியைப் பார்த்ததும், இதயம் ஒரு வினாடி நின்று, பின் துடிக்க ஆரம்பித்தது.

"அவள் என் காதலி" என்று சொல்லப் போகிறேன், என்று தானே நினைக்கிறீர்கள்?

மன்னிக்கவும் அது தான் இல்லை. அவள், என் கல்லூரி நண்பன் தமிழரசுவின் காதலி கண்மணி.

அவளை அங்கு பார்த்ததற்கு, நான் ஏன் திடுக்கிட வேண்டும் என, உங்களுக்குத் தோன்றுமே?

அதுதான் இந்தக் கதை!

நான் கல்லூரியில் படித்த நாட்களில், எனக்கு மிகவும் நெருங்கிய நண்பன் தமிழரசு. பெயருக்கு ஏற்றாற்போல், தமிழரசுக்கு, தமிழ் மேல் அலாதியான பற்று. கவிதைகள், கதைகள், கட்டுரைகள், பட்டிமன்றம் என்று, இன்னும் பிற ஏராளமான போட்டிகளில், துடிப்புடன் கலந்து கொண்டு, பரிசு பெற்று வருவான்.

தஞ்சையில் இருந்த எங்கள் கல்லூரியிலும், சற்று வட்டாரத்தில் இருந்த எல்லாக் கல்லூரிகளிலும், தமிழரசுவைப் போட்டியில் சந்திக்கப் பலர் இருந்த போதிலும், வெற்றிக்கனி பறிப்பது, தமிழரசாகத்தான் இருப்பான்.

ஆனால், அவன் இளநிலை இறுதியாண்டு படிக்கையில், ஒரு சரியான போட்டி வந்து சேர்ந்தது அவள் தான் கண்மணி. அவள், முதலாண்டு தமிழ் இலக்கிய மாணவியாக இருந்த போதிலும், பேச்சுத் திறமை, குரல் வளம், தோற்றம் எல்லாமே மிகவும் நேர்த்தியாக இருந்தது.

எங்கள் கல்லூரியிலேயே நடந்த ஒரு பேச்சுப் போட்டியில், "வாழ்க்கையில் அவசியம் காதலா, காசா?" என்பதை ஒட்டியும், வெட்டியும் பேச வேண்டிய தலைப்பில், தமிழரசு - கண்மணி இருவரும் எதிர், எதிராக மோதினர். 'காதல்தான்' என்ற சார்பில் பேசிய கண்மணி, 'காசு தான்' என்று பேசிய தமிழரசுவைத் தோற்கடித்து, முதல் பரிசையும், ஏராளமான கைத் தட்டல் களையும் அள்ளிச் சென்றாள்.

பிறகு என்ன என்கிறீர்களா...

இது கூடவா தெரியாது? மோதலில் ஆரம்பித்து, காதலில் முடிந்தது.

கல்லூரியில், கண்மணியைக் காதலிக்க பலர் காத்திருந்த போதும், அவள் கடைக்கண் பார்வை, தமிழரசுவின் மேல்தான் விழுந்தது அவனும் காதலில் வீழ்ந்தான் கவிதைகளாக எழுதிக் குவித்தான்.

படிப்பு முடிந்த பின் தான் கல்யாணம் என்று கண்டிப்பாகக் கூறிய கண்மணி, தமிழரசுவை ஒரு நிரந்தர வேலையிலும் பார்க்க ஆசைப்பட்டாள். சற்று கனவுலகிலேயே அலைந்து, திரிந்து கொண்டிருந்த தமிழரசுவின் இலக்கு, திரைப்பட உலகமாக அமைந்திருந்தது. அவன் ஒரு திரைப்படக் கவிஞனாகவோ, கதாசிரியனாகவோ அல்லது இயக்குனராகவோ உருவாக வேண்டுமென்றே முயற்சி செய்து கொண்டிருந்தான்.

அரசு உத்தியோகத்தில், அழுத்தமாக அமர்ந்திருந்த கண்மணியின் பெற்றோருக்கு, தமிழரசுவின் கனவுகள் ரசிக்கும்படியில்லை.

தமிழரசுவின் வீட்டிலும், நிரந்தரமாக சம்பாதிக்கும் திறனற்ற பிள்ளைக்கு, ஒரு வீட்டில் சென்று, பெண் கேட்கும் அளவுக்கு தைரியமில்லை.

பிறகென்ன... கண்மணி... தமிழரசுவின் காதல் சிதைந்தது.

கண்மணியின் அப்பா, ஓராண்டுக்குள் வடக்கே ஓர் இடத்திற்கு மாற்றல் பெற்று, குடும்பத்துடன் மறைந்து போனார். தமிழரசு மட்டும், கண்மணியை மறக்க முடியாமல், "நிழலைத் துரத்தினவன்... கண்ணுக்கெட்டாத விண்மீன்... பெண் என்றோர் மண்..." என, பிதற்றலாக கவிதைகள் எழுதிக் கொண்டிருந்தான்.

"என்னங்க...என்னை நினைவிருக்கிறதா?" என்ற படி, என் எதிரே வந்து நின்றாள் கண்மணி.

தமிழரசுவைப் பற்றிய பழைய நினைவில் மூழ்கியிருந்த நான், கண்மணி சாப்பிட்டு எழுந்து, கை கழுவி என் முன்னால் வந்து புன்னகையுடன் கேள்வி கேட்டதை அப்போதுதான் உணர்ந்தேன். "ஏன் தெரியாமல்... கண்மணிதானே... உங்களை எப்படிங்க மறக்க முடியும்... நல்லா இருக்கீங்களா?" என்றேன்.

"நல்லா இருக்கேன் என்னங்க மரியாதையெல்லாம் பலமா இருக்கு... பத்து வருஷத்தில நான் அவ்வளவு பெரிய பொம்பளை யாகவா மாறிட்டேன்?" என்றாள், கண்மணி சிரித்தபடி. மாறித்தான் இருந்தாள். சற்று பூசினாற் போல்... கல்யாணமாகி குழந்தை பெற்றவளுக்கு உள்ள பளபளப்பு... பகட்டான பட்டுச் சேலை, நகைகள், வகிட்டில் குங்குமம்

"இதோ, கை கழுவிட்டு வர்றேன்..." என்றபடி எழுந்தேன்.

"சரி... வாங்கண்ணா... அதோ அங்க என் கணவர் உட்கார்ந்திருக்கார் அறிமுகம் செய்றேன்," என்றபடி சென்றாள்.



நான் கையைத் துடைத்தபடி சென்ற போது, மிக நாகரிகமாக உடையணிந்து, ஏழு வயதுப் பெண் குழந்தையுடன் பேசிக் கொண்டிருந்தவரை, எனக்கு அறிமுகம் செய்து வைத்தாள் கண்மணி.

"வாங்கண்ணா... இவர்தான் என் கணவர் அழகேசன். வேலூரில் உள்ள கல்லூரியில் பேராசிரியராக இருக்கிறார். இவள், என் மகள் பொன்மணி மூன்றாவது படிக்கிறாள். என்னங்க... இவர், என்னோடு தஞ்சை கல்லூரியில் படித்தவர் பெயர் முத்தரசன்... நான் கூட சொல்லியிருக்கேனே... எனக்குக் கல்லூரியில் படிக்கும் போது, தமிழரசு என்று ஒருவர், என்னோடு கவிதை, பேச்சு போட்டியில் எல்லாம் போட்டி போடுவாருன்னு... அவருடைய மிக நெருங்கிய நண்பர்," என்று அறிமுகம் செய்து வைத்தாள்.

எனக்கு, தமிழரசுவின் பெயரை அவ்வளவு இயல்பாகக் கூறி, தன் கணவருக்கு கண்மணி அறிமுகம் செய்து வைத்தது வியப்பாக இருந்தது.

"வணக்கம்," என்று கை குவித்தேன் அவரும் கை குவித்தார்.

"உட்காருங்க," என்று, தன் அருகில் ஓர் இருக்கையைக் காட்டிய கண்மணி, "சொல்லுங்க... எப்படி இருக்கீங்க... எங்க வேலை பார்க்குறீங்க... உங்க நண்பர் எப்படி இருக்கிறார்... இந்தக் கல்யாணத்தில் நீங்கள் யார் பக்கம்?" என்று, சரமாரியாகக் கேள்விக் கணைகளைத் தொடுத்தாள்.

"இரு... இரு... ஒவ்வொரு கேள்வியாகப் பதில் சொல்கிறேன்..." என்று, ஆரம்பித்தேன்.

நான் எங்கு வேலை செய்கிறேன்... எனக்கும், இந்தக் கல்யாணத்திற்கும் என்ன சம்பந்தம் போன்றவைகளுக்கெல்லாம் பதில் சொன்ன நான், வேண்டுமென்றே தமிழரசுவைப் பற்றிய கேள்விக்கான பதிலைத் தவிர்த்தேன்.

தோல்வியில் முடிந்த அந்தக் காதல், அவளை எந்த அளவு பாதித்திருந்தது என்பதை அறிய வேண்டுமென்ற ஆசைதான்... தவிர, அவ்வளவு தைரியமாகத் தன் கணவனிடம் தமிழரசுவைப் பற்றி வேறு சொல்லி இருக்கிறாளே என்ற வியப்பு!

மீண்டும் கண்மணியே கேட்டாள்...

"என்ன அண்ணா... தமிழரசு எப்படி இருக்காங்க?" என்றாள். தொடர்ந்து, "கல்யாணமாயிடுச்சா... தஞ்சைலதான் இருக்காங்களா?" எனக் கேட்டாள்.

நான் கண்மணியை உற்றுப் பார்த்தேன். நல்ல வேளையாக அந்த சமயத்தில் கண்மணியின் கணவர், அவருடைய மொபைல் போனில் ஏதோ அழைப்பு வந்ததால், அதை எடுத்து, சத்தமில்லாத ஏதோ ஒரு மூலைக்குச் சென்றிருந்தார்.

"ஏன் கண்மணி... உங்கள் காதல் தோல்வி, உங்களை பாதிக்கவே இல்லையா?" என்றேன். என்னைக் கொஞ்ச நேரம் உற்றுப் பார்த்தாள் கண்மணி...

"பாதிச்சது தான்... ஆனால் கொஞ்ச நாட்கள்தான்."

"ம்..."

"ஆமாண்ணா... கல்லூரி நாட்களிலே நம் உடலில் ஓடுவது இள ரத்தம்... ஏகப்பட்ட எதிர்பார்ப்புகள், கனவுகள் எல்லாம் ஆனால், அவை எல்லாமே நிறைவேறும்ன்னு நிச்சயமா சொல்ல முடியுமா? காதல் என்பது என்ன என்று ரொம்ப யோசிச்சேன் காதல்ங்கறது எனக்கு ஓர் ஆழமான நட்பு என்றுதான் தோணிச்சு

"அந்த ஆழமான நட்பு, ஒரு திருமண பந்தத்தில் முடிந்தால் மகிழ்ச்சி தான் ஆனால், அது முடியவில்லை என்பதற்காக, நாம் ஆயுசு முழுக்க அழுது கொண்டே இருப்பது, நாம், நமக்கே செய்து கொள்ளும் துரோகமில்லையா?

"தமிழரசு மேல எனக்கு பிரியம் இருந்தது. அதே சமயம், அதற்காக பெற்று, வளர்த்தவங்களை தூக்கி எறிந்து விட்டு அவருதான் முக்கியம்ன்னு வர எனக்குத் தோணலை. அதோட, அப்ப தமிழரசு வாழ்க்கையில் எந்தக் குறிக்கோளும் தெளிவா இல்லாமல் அலைந்து கொண்டிருந்தார். அவரைக் கல்யாணம் செய்து, நிம்மதியாகவோ, மகிழ்ச்சியாகவோ இருக்க முடியுமா? சொல்லுங்கள்?"

"இருந்தாலும்..."

"இருங்க... நான் காதலுக்கு மரியாதை செய்யாமல், துரோகம் செய்து விட்டேன்னு நினைக்கலாம்... இந்த நாளைய வாழ்க்கைகளில் சில வார்த்தைகள், வாதங்கள் இவையெல்லாம் பேசவும், கேட்கவும், ரசிக்கவும் நன்றாக இருக்குமே தவிர, நிஜ வாழ்க்கைக்கு உதவாது. அதை நிர்ணயிப்பது பல்வேறு சமாச்சாரங்கள்... "என்னடா... காதல் தான் வாழ்க்கைக்குத் தேவைன்னு பேசி, பரிசு வாங்கினவளா இப்படிப் பேசுறாளேன்'னு நினைக்கிறீர்களா...

"அது, வாதத்திற்குத்தான் வாழ்க்கைக்கு அல்ல... அதோட, நாம் ஒவ்வொருவரையும், வாழ்க்கையின் ஒவ்வோர் வினாடியையும் காதலிக்கிறோம் இல்லீங்களா... அப்பத்தானே வாழ்க்கை ரசிக்கும்... கைக்குக் கிடைக்காததையும், போன காலங்களையும் நினைச்சு, நினைச்சு அழுறதால, ஏதேனும் பயனுண்டா... சொல்லுங்க?" என்றாள் கண்மணி.

அவளுடைய பேச்சுத்திறன் என்னை வியக்க வைத்தது. இவள் அளவு வாழ்க்கையை யதார்த்தமாக ஏற்றுக் கொள்ளும் பக்குவம், தமிழரசுவுக்கு இல்லாமல் இருந்தது தான் சோகம்.

"சொல்லுங்க... தமிழ் என்ன பண்றாரு... கல்யாணம் ஆகியிருக்கணுமே?" என்றாள் கண்மணி சிரித்தபடி.

ஒரு வினாடி யோசித்தவன், "ம்... ஆயிடுச்சு..." என்றேன். "அதானே... அவருக்கும் புரிஞ்சிருக்கும்...காதல் எல்லாம் கவிதைக்கும், கதைக்கும், திரைப்படத்துக்கும், பட்டிமன்றத்துக்கும்ன்னு," என்றாள் சிரித்தபடி.

"எங்க வேலை பார்க்கிறார் அண்ணா? அவருக்குத் திரைப்பட உலகத்துக்குள்ள நுழையணும்ன்னு ரொம்ப ஆசையில்ல..."

"ம்... ஆமாம்... அதில்தான் இருக்காரு..."

"அப்படியா... என்னவா... பாட்டெல்லாம் எழுதறாரா... நான் படம் பார்க்கறதை விட்டு ரொம்ப நாளாச்சு."

"ம்... ஆமாம்... பாட்டு எழுதறாரு."

"நல்லா எழுதுவாரு அப்பவே... பார்த்தா விசாரிச்சேன்னு சொல்லுங்க..." என்றபடி எழுந்த கண்மணி, "நேரமாச்சு... கிளம்பணும்... உங்களை பார்த்ததுல மகிழ்ச்சி.. வேலூர் பக்கம் வந்தீங்கன்னா, இவரு பேரை சொல்லிக் கேளுங்க... எல்லாருக்கும் இவரைத் தெரியும்... வீட்டுக்கு வாங்க..." என்று, புன்னகையுடன் புறப்பட்டாள்.

நான் விடை கொடுத்து அனுப்பினேன். ஆனால், உண்மையைச் சொல்லி, கண்மணியின் வாழ்க்கையை நரகமாக்க நான் விரும்பவில்லை.

காதல் தோல்வியில் கவிதைகள் எழுதிக் குவித்து, வந்த வேலைகளை உதறி, மண வாழ்க்கை தேடாமல், இன்று மனநல மருத்துவமனையில் இருக்கும் தமிழரசுவைப் பற்றிச் சொல்லி, கண்மணியின் வாழ்க்கையைப் பாழாக்க என் மனசு இடம் தரவில்லை.

கண்மணி உலகம் புரிந்து கொண்டவள் வாழ்க்கையில் வெற்றி பெற அதுதான் மிக முக்கியம்.

இந்தத் தமிழ்க் காதல் கதையின் தனித்துவம் என்ன என்று கேட்பீர்களே?

ஒரு ஆங்கில வார்த்தையோ, வடமொழிச் சொல்லோ இல்லாமல், முழுக்க, முழுக்க தமிழிலேயே எழுதப்பட்ட காதல் கதை இது. சந்தேகமாக இருந்தால், மீண்டும் ஒரு முறை, முதலிலிருந்து படித்துப் பாருங்கள்!

# அறிவியல் உலகம்



## குறைய மறுக்கும் காற்று மாசு!

போன ஆண்டும் பெருந்தொற்று இருந்தது. இந்த ஆண்டும் அது நீடிக்கிறது. ஆனால் முன்பு ஆலைகள், சாலைகள் என்று சகலமும் பொது முடக்கத்தில் இருந்ததால், காற்று மாசு குறைந்திருந்தது. ஆனால் இந்த ஆண்டு அப்படி இல்லை என்கின்றனர்,

விஞ்ஞானிகள்.அண்மையில், ஹவாய் தீவில் உள்ள மவுனா லோவா வளிமண்டல கண்காணிப்பகத்தில், காற்று மாசு அளவுகள் எடுக்கப்பட்டன. அதன்படி காற்று மாசின் அளவுகள் மோசமான உச்சத்தை எட்டியுள்ளதாக விஞ்ஞானிகள் கவலை தெரிவித்துள்ளனர். எந்த அளவுக்கு மோசம்? பூமியில் கடந்த 40 லட்சம் ஆண்டுகளாக இல்லாத அளவில் காற்றில் மாசு அதிகமாகியுள்ளது.கடந்த பல மாதங்களாக தொடரும் பொதுமுடக்கம், சில வகை காற்று மாசுகளை குறைத்திருப்பது உண்மை தான்.

அதனால் தான், காற்றின் புகை மண்டலம் விலகி, வெகுதொலைவு வரை தெளிவாக பார்க்க முடிந்தது. ஆனால், சில நூற்றாண்டுகளாக, தொடர்ந்து காற்றில் கலக்கும் மாசுபாடுகளின் அளவு, ஒரு சில மாதங்கள் முடக்கத்தால் அடியோடு மறையாது என, விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். மாசுபாட்டை குறைக்க, பொதுமுடக்கத்தை நம்பியிருப்பதைவிட, மின் வாகனங்கள், சூரிய மின்சாரம், போன்றவற்றை அதிக அளவில் உலக மக்கள் பயன்படுத்துவதே நிரந்தர தீர்வு என்கின்றனர், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள்.



## போரில் அசத்திய செயற்கை நுண்ணறிவு!

பிரிட்டனின் கடற்படை அண்மையில் ஒரு போர் பயிற்சியை மேற்கொண்டது. 'நேட்டோ' கூட்டமைப்பின் 10 நாடுகளைச் சேர்ந்த 3,300 வீரர்கள், 'உடைக்க முடியாத கவசம்' என்ற அந்த ஒத்திகையில் பங்கேற்றனர். இதுவரை வழக்கமாக நடக்க கூடியது தான். ஆனால் இந்த முறை அசலான ஏவுகணைகளை ஏவும் தாக்குதல் பயிற்சியில், செயற்கை நுண்ணறிவு கொண்ட கணினிகளும் பங்கெடுத்தன.



ஒலியைவிட வேகமாக பயணிக்கும் எதிரி ஏவுகணைகளை துல்லியமாக அடையாளம் கண்டு குறுக்கிட்டு தகர்ப்பதில், செயற்கை நுண்ணறிவு கணினிகள் அபாரமாக செயல்பட்டதாக போர் வியூக அதிகாரிகள் பிற்பாடு தெரிவித்தனர்.

பயிற்சியில் பங்கேற்ற 15 போர் கப்பல்களில் இருந்த கடற்படை அணியினரின் நம்பிக்கையை, செயற்கை நுண்ணறிவு கணினிகள் பெற்றுவிட்டதாகவே, 'ராயல் நேவி'யின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது. மனிதர்களை ஒதுக்கிவிடாமல், ஒரு சிறந்த அணி தோழனாக செயற்கை நுண்ணறிவால் பணியாற்ற முடியும் என்பதை இந்த போர் பயிற்சி உணர்த்தியது.

## சிறு விசிறிகளால் ஆன காற்றாலை!



கடலில் மிதக்கும் காற்று மின்னாலைத் துறையில் போட்டிகள் வலுக்கின்றன. அமெரிக்கா, இங்கிலாந்து போன்றவை தங்கள் கடற்கரையிலிருந்து சில காத துாரத்தில் பெரிய காற்றாலைகளை நிறுவி, 'பசுமை' மின் உற்பத்தியை அதிகரித்து வருகின்றன.

இந்த நிலையில், நோர்வேயின் 'விண்ட் கேட்ச்சர் சிஸ்டம்ஸ்' ஒரு புதுமையான கடல் மிதவைக் காற்றாலையை அறிமுகப்படுத்துகிறது. மூன்று அல்லது நான்கு விசிறி களைக் கொண்ட காற்றாலைக்குப் பதிலாக, விண்ட் கேட்ச்சரின் கண்டுபிடிப்பு 117 சிறிய விசிறிகளைக் கொண்டுள்ளது. கடலில் ஒரே இடத்தில் மிதக்கும் இந்த அமைப்பின் உயரம் 1000 அடி.உலகின் மிகப் பெரிய காற்றுமின் மிதவை ஆலையைவிட, ஆண்டுக்கு ஐந்து மடங்கு அதிக மின் உற்பத்தியை விண்ட் கேட்ச்சர் அமைப்பால் தரமுடியும். அதாவது 80 ஆயிரம் ஐரோப்பிய வீடுகளின் மின்சாரத் தேவையை, ஒரே ஒரு விண்ட் கேட்ச்சர் அமைப்பு நிறைவேற்றிவிடும்.

வழக்கமான காற்றாலையின் ஒரு விசிறி அல்லது மின் ஜெனரேட்டர் பழுதானாலும் அதன் மொத்த செயல்பாடும் நின்றுவிடும். ஆனால், விண்ட் கேட்ச்சரின் 117 சிறு விசிறிகளில் சிலது பழுதானாலும், மற்றவை தொடர்ந்து மின்சார உற்பத்தியை தொடரும்.தவிர விண்ட் கேட்ச்சரின் பராமரிப்பும் எளியது.எனவே நோர்வேயின் கண்டுபிடிப்பு விரைவில் ஹிட் ஆக வாய்ப்பு உள்ளது.

## கழற்றக்கூடிய கேமரா கொண்ட ஸ்மார்ட்வாட்ச் உருவாக்கும் பேஸ்புக்

பேஸ்புக் நிறுவனம் உருவாக்கி வரும் புது ஸ்மார்ட்வாட்ச் விவரங்கள் இணையத்தில் லீக் ஆகி இருக்கிறது.

உலகின் முன்னணி நிறுவனங்கள் ஒவ்வொன்றாக ஸ்மார்ட்வாட்ச் உருவாக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. அந்த வரிசையில், பேஸ்புக் நிறுவனமும் ஸ்மார்ட்வாட்ச் ஒன்றை உருவாக்கி வருகிறது. புது மாடலில் பல்வேறு நவீன அம்சங்கள் வழங்கப்படும் என கூறப்படுகிறது.

தற்போது வெளியாகி இருக்கும் தகவலில் புது ஸ்மார்ட்வாட்ச் கழற்றக்கூடிய கேமராக்களை கொண்டிருக்கும் என தெரிகிறது. சந்தையில் கிடைக்கும் மற்ற ஸ்மார்ட்வாட்ச் மாடல்களுடனான போட்டியை எதிர்கொள்ள பேஸ்புக் தனது ஸ்மார்ட்வாட்ச் மாடலில் வீடியோ கால் மேற்கொள்ள ஏதுவாக கழற்றக்கூடிய கேமராக்களை வழங்க இருப்பதாக கூறப்படுகிறது.

கழற்றக்கூடிய கேமரா 1080 பிக்சல் தரத்தில் புகைப்படம் மற்றும் வீடியோக்களை எடுக்கும் திறன் கொண்டிருக்கும் என தெரிகிறது. ஸ்மார்ட்போன்களை போன்றே எதிர்காலத்தில் ஸ்மார்ட்வாட்ச்களையும் பயன்படுத்த வைக்கும் நோக்கில் பேஸ்புக் புது ஸ்மார்ட்வாட்ச்-ஐ உருவாக்கி வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

**தரையில் முளைக்கும் சாதாரண புற்களைப் போலவே, ஒரு தாவரத்தை மனிதன் உருவாக்கும் வரை, அவனது அறிவியல் அறிவைப் பார்த்து இயற்கை சிரித்தபடியே இருக்கும்.**

**தாமஸ் ஆல்வா எடிசன்,**
**அமெரிக்க கண்டுபிடிப்பாளர்**






## அதிக டெஸ்ட்களில் விளையாடிய இங்கிலாந்து வீரர்: ஜேம்ஸ் அண்டர்சன் புதிய சாதனை

அதிக டெஸ்ட்களில் விளையாடிய இங்கிலாந்து வீரர் என்கிற புதிய சாதனையை வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன் நிகழ்த்தியுள்ளார்.

பிர்மிங்ஹமில் இன்று தொடங்கிய நியூசிலாந்திற்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் விளையாடும் ஜேம்ஸ் அண்டர்சன், தனது 162 ஆவது டெஸ்டை விளையாடுகிறார். இதன்மூலம் அதிக டெஸ்ட்களில் விளையாடிய குக்கின் சாதனையை (161 டெஸ்ட்கள்) முறியடித்துள்ளார்.

2003 இல் லார்ட்ஸ் மைதானத்தில் ஜிம்பாப்வேக்கு எதிராக டெஸ்ட் கிரிக்கெட்டில் இவர் அறிமுகமானார். இதுவரை 616 விக்கெட்களுடன் அதிக விக்கெட்கள் எடுத்த வேகப்பந்து வீச்சாளர் என்கிற பெருமையைப் பெற்றுள்ளார்.

2008 இல் ஸ்டூவர்ட் பிராடுடன் இணைந்து நியூசிலாந்திற்கு எதிராக இங்கிலாந்து அணி வெற்றி பெற பெரிதும் உதவினார் அண்டர்சன். அந்த டெஸ்டிலிருந்து ஆண்டர்சன் - பிராட் கூட்டணி, டெஸ்டில் முத்திரை பதிக்க ஆரம்பித்தது. முதல் 20 டெஸ்ட்களில் சுமாராக பந்துவீசி வந்த ஆண்டர்சன், பிராடுடன் இணைந்த பிறகு வெற்றிகரமான பந்துவீச்சாளராக மாறினார். 2009-2013 வரை மூன்று ஆஷஸ் வெற்றிகளையும் 2012-13-இல் இந்தியாவில் டெஸ்ட் தொடரையும் வெல்ல இங்கிலாந்து அணிக்கு முக்கியப் பங்களிப்பு செய்தார்.

30 வயதிற்கு முன்பு 71 டெஸ்ட்களில் 268 விக்கெட்களை எடுத்த அண்டர்சன், 30 வயதிற்குப் பிறகு 90 டெஸ்ட்களில் 348 விக்கெட்களை எடுத்துள்ளார். வயது அதிகமாக ஆக, திறமையை அதிகமாக வெளிப்படுத்தி, ஏராளமான விக்கெட்களைக் குவித்து வருகிறார். தற்போது அவருக்கு 39 வயதாகிறது.



## பெர்லின் தொடரிலிருந்தும் விலகினார் ஒசாகா

இதுவரை நான்கு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ள ஒசாகா, சமீபத்தில் 2020 யு.எஸ். ஓபின் மற்றும் 2021 ஆஸ்திரேலிய ஓபின் பட்டங்களை வென்றிருந்தார். ஊடகவியலாளர் சந்திப்பினால் தனக்கு மன அழுத்தம் ஏற்படுவதால் பிரெஞ்ச் ஓபின் தொடரில் அவர்களைச் சந்திப்பதைத் தவிர்ப்பதாக அவர் தெரிவித்திருந்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த பிரெஞ்ச் ஓபின் போட்டித்தொடரின் நிர்வாகம், ஒசாகாவின் நடவடிக்கைக்கு 15,000 டாலர் அபராதம் விதித்தது. முதல் சுற்று வெற்றிக்குப் பிறகு செய்தியாளர் சந்திப்பைத் தவிர்த்ததால் இந்த நிலை அவருக்கு ஏற்பட்டது.

மேலும் தொடர்ந்து செய்தியாளர் சந்திப்பைத் தவிர்த்தால் கடுமையான விளைவுகள் ஏற்படும் என்றும் பிரெஞ்ச் ஓபின் உள்ளிட்ட நான்கு கிராண்ட்ஸ்லாம் போட்டிகளின் நிர்வாகங்களும் எச்சரித்தன. இதையடுத்து, தன்னால் கவனச்சிதறல் ஏற்பட வேண்டாம் என்று கூறி இந்த வருட பிரெஞ்ச் ஓபின் தொடரிலிருந்து விலகினார் ஒசாகா.

"மன அழுத்தம் ஏற்படுவதால் செய்தியாளர் சந்திப்பைத் தவிர்க்க நினைத்தேன். தொடரிலிருந்து நான் விலகுவதால் மற்ற வீரர்கள் விளையாட்டில் கவனம் செலுத்த முடியும். யு.எஸ். ஓபின் 2018 இலிருந்து நான் மன அழுத்தத்தால் பாதிப்படைந்துள்ளேன். அதைச் சமாளிக்க மிகவும் சிரமப்பட்டு வருகிறேன். பொதுவெளியில் என்னால் இயல்பாகப் பேச முடியாது. ஊடகவியலாளர் சந்திப்புக்கு முன்பு எனக்குப் பதற்றம் ஏற்படுகிறது. அதனால்தான் பிரெஞ்ச் ஓபின் போட்டியில் அவர்களைச் சந்திப்பதைத் தவிர்க்க நினைத்தேன். சரியான நேரத்தில் போட்டி நிர்வாகங்களுடன் இதுபற்றி விவாதிப்பேன்" என்று தன் விலகலுக்கு அவர் விளக்கம் அளித்தார்.

இந்த நிலையில், ஜூன் 14 முதல் ஆரம்பமாகவுள்ள பெர்லின் போட்டியிலிருந்தும் ஒசாகா விலகியுள்ளார். பிரெஞ்ச் ஓபின் போட்டியிலிருந்து விலகிய ஒசாகா, நேராக அமெரிக்கா லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள தனது வீட்டுக்குச் சென்றுவிட்டார். தற்போது இரு போட்டிகளிலிருந்தும் அவர் விலகியுள்ளதால் ஜூன் 28 முதல் ஆரம்பமாகவுள்ள விம்பிள்டன் போட்டியில் ஒசாகா கலந்துகொள்வாரா என்கிற கேள்வி எழுந்துள்ளது.



## ஒத்திவைக்கப்பட்ட பாகிஸ்தான் சுப்பர் லீக் ரி-20 தொடர் மீண்டும் நடைபெறும் திகதி அறிவிப்பு!

சர்வதேச கிரிக்கெட் சபையின், மே மாதத்துக்கான சிறந்த வீரருக்கான பரிந்துரை பட்டியலில், இலங்கை டெஸ்ட் அணியின் இளம் சுழல் பந்துவீச்சாளர் பிரவீன் ஜயவிக்ரம பெயரிடப்பட்டுள்ளார். சர்வதேச கிரிக்கெட்டில் மாதாந்தம் சிறப்பாக பிரகாசிக்கும் வீரர்களை கௌரவப்படுத்தும் நோக்கில், சர்வதேச கிரிக்கெட் வாரியம் மாதத்துக்கான சிறந்த வீரரை அறிவித்து வருகின்றது. அந்தவரிசையில், கடந்த மாதம் (மே) சர்வதேச போட்டிகளில் பிரகாசித்த மூன்று வீரர்களை தெரிவுசெய்து, அதிலிருந்து ஒரு வீரரை வாக்கெடுப்பின் மூலம் மாதத்துக்கான சிறந்த வீரராக அறிவிக்கும்.

அதன்படி, கடந்த மாதம் பங்களாதேஷ் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அறிமுகத்தை பெற்றிருந்த இலங்கை அணியின் பிரவீன் ஜயவிக்ரம மே மாதத்துக்கான சிறந்த வீரருக்கான பட்டியலில் பரிந்துரைக்கப்பட்டுள்ளார். பிரவீன் ஜயவிக்ரம அறிமுக டெஸ்ட் போட்டியில் விளையாடி 11 விக்கெட்டுகளை வீழ்த்தியதுடன், இலங்கை அணியின் வெற்றிக்கும் காரணமாக இருந்தார். அறிமுக டெஸ்ட் போட்டியில் அதிகூடிய விக்கெட்டுகளை வீழ்த்திய இலங்கை வீரர் என்ற பெருமையையும் இவர் பெற்றுக்கொண்டார்.



இந்தப்பட்டியலில் பிரவீன் ஜயவிக்ரமவுக்கு அடுத்தப்படியாக, பங்களாதேஷ் அணியின் விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் முஷ்பிகூர் ரஹீம் பரிந்துரைக்கப்பட்டுள்ளார். இவர், இலங்கை அணிக்கு எதிராக ஒரு டெஸ்ட் மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகளில் விளையாடியிருந்தார். அதிலும், முதன்முறையாக இலங்கை அணிக்கு எதிராக பங்களாதேஷ் அணி ஒருநாள் தொடரை கைப்பற்ற காரணமாக இருந்த இவர், இரண்டாவது ஒருநாள் போட்டியில் 125 ஓட்டங்களை குவித்து அணியின் வெற்றிக்கு உதவினார். இலங்கை அணிக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான சிறப்பாட்டக்காரராகவும் இவர் தெரிவுசெய்யப்பட்டார். மே மாதத்துக்கான சிறந்த வீரருக்காக பாகிஸ்தான் அணியின் வேகப்பந்துவீச்சாளர் ஹசன் அலி பரிந்துரைக்கப்பட்டுள்ளார். இவர் சிம்பாப்வே அணிக்கு எதிராக விளையாடிய இரண்டு டெஸ்ட் போட்டிகளில் 14 விக்கெட்டுகளை வீழ்த்திய நிலையில், இந்த பட்டியலில் இடம்பிடித்துள்ளார். குறித்த மூன்று வீரர்களில், ஒரு வீரரை வாக்கெடுப்பின் அடிப்படையில், மே மாதத்துக்கான சிறந்த வீரராக சர்வதேச கிரிக்கெட் சபை அறிவிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## டோக்கிய ஒலிம்பிக் பயண கட்டுப்பாடுகளை தளர்த்திய அமெரிக்கா

ஜப்பானில் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளை முன்னிட்டு பயண கட்டுப்பாடுகளை அமெரிக்கா தளர்த்தி அறிவித்துள்ளது.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் கடந்த ஆண்டு நடக்க இருந்த ஒலிம்பிக் போட்டி கொரோனா பரவலால் இந்த ஆண்டுக்கு தள்ளிவைக்கப்பட்டது. இதன்பின்னர் வருகிற ஜுலை 23ந் திகதி தொடங்கி ஆகஸ்டு 8ந் திகதி வரை நடக்க உள்ளது என அறிவிக்கப்பட்டது. பாராலிம்பிக் போட்டிகள் ஆகஸ்ட் 24ம் திகதி தொடங்கி செப்டம்பர் 5ம் திகதி வரை நடைபெறும். ஒலிம்பிக் போட்டிகளை முன்னிட்டு பல்வேறு நாடுகளை சேர்ந்த ரசிகர்களும் விளையாட்டு போட்டிகளை காணுவதற்காக தங்களது நாடுகளில் இருந்து ஜப்பானுக்கு பயணம் மேற்கொள்ள இருக்கின்றனர்.

இந்நிலையில், கடந்த மே 25ம் திகதி அமெரிக்கா வெளியிட்ட அறிவிப்பில், கொரோனா பாதிப்பு எண்ணிக்கை உயர்வை முன்னிட்டு ஜப்பானுக்கு அமெரிக்கர்கள் பயணம் செய்ய வேண்டாம் என அறிவுறுத்தி இருந்தது. இந்நிலையில், ஜப்பானில் நடைபெறவுள்ள டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளை முன்னிட்டு பயண கட்டுப்பாடுகளை அமெரிக்கா தளர்த்தி அறிவித்துள்ளது.



அந்த அறிவிப்பில், ஜப்பானில் கொரோனா பாதிப்புகள் அதிகரித்துள்ள சூழலில் பயணம் செய்வது மறுபரிசீலனை செய்து கொள்ளப்பட வேண்டும். ஜப்பானுக்கு செல்வதற்கு முன் தங்களுடைய சுகாதார நலன் சார்ந்த விடயங்களுக்கு ஆலோசனை வழங்குபவர்களுடன், அமெரிக்க மக்கள் அடுத்து மேற்கொள்ள வேண்டிய பயணம் பற்றி கலந்து விவாதித்து கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளது.

ஜப்பான் நாட்டில் கொரோனா பாதிப்புகள் அதிகளவில் காணப்படும் நிலையில் அமெரிக்காவின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம், 3ம் நிலை பயண சுகாதார நோட்டீசை வெளியிட்டுள்ளது. இந்நிலையில், அமெரிக்காவின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு அமைப்பின் எச்சரிக்கை பற்றி கவனமுடன் இருக்க வேண்டும். நோய் தொற்றுள்ள நபர்களிடம் தொடர்பு கொள்ளாமல் தவிர்ப்பது நலம் என்றும் தனது குடிமக்களுக்கு அமெரிக்கா அறிவுறுத்தியுள்ளது.

# உலக செய்திகள்

## பஸ்ஸின் மீது ஐந்து மாடி கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் 9 பேர் உயிரிழப்பு!

தென் கொரியாவில் ஐந்து மாடிக்கட்டடம் ஒன்று பஸ் ஒன்றின் மீது வீழ்ந்ததில் குறைந்தது 9 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தெற்கு புறயபெதர நகரில் இடம்பெற்ற இந்த அனர்த்தத்தில் மேலும் 8 பேர் காயமடைந்துள்ளனர்.

17 பேரை ஏற்றிய பஸ், கட்டடம் அமைந்திருந்த சாலையில் நிறுத்தப்பட்டிருந்ததாக அந்நாட்டின் தீயணைப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. கட்டடம் இடிந்து வீழ்ந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. குறித்த கட்டடம் இடிந்து வீழ்வதற்கு முன்னதாக அந்த பகுதியில் பணியில் ஈடுபட்டிருந்த அனைத்து பணியாளர்களும் வெளியேற்றப்பட்டுள்ளனர்.



## மியன்மாரில் இராணுவ விமானம் விபத்துக்குள்ளானதில் 12பேர் உயிரிழப்பு!

மியன்மாரின் இரண்டாவது பெரிய நகரமான மாண்டலே அருகே இராணுவ விமானம் விபத்துக்குள்ளானதில் 12பேர் உயிரிழந்துள்ளதாக நகர தீயணைப்பு சேவை தெரிவித்துள்ளது. இந்த விமானம் தலைநகர் நெய்பிடாவிலிருந்து பைன் ஓ எல்வின் நகரத்திற்கு பறந்து கொண்டிருந்த போது எஃகு ஆலையில் இருந்து சுமார் 300 மீட்டர் (984 அடி) தூரத்தில் விபத்துக்குள்ளானது. இந்த விமானம் ஆறு ராணுவ வீரர்களையும், துறவிகளையும் ஒரு புதிய மடாலயத்திற்கு அடித்தளம் அமைக்கும் விழாவிற்காக அழைத்துச் சென்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், இந்த விபத்தின் போது விமானி மற்றும் ஒரு பயணி தப்பிப்பிழைத்து ஒரு இராணுவ மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனினும் தரையில் இருந்த மக்களுக்கு உயிர் சேதம் ஏற்பட்டதாக எந்த அறிக்கையும் இல்லை. விபத்துக்கு என்ன காரணம் என்று உடனடியாகத் தெரியவில்லை. மியான்மாரில் நீண்ட காலமாக மோசமான விமான விபத்து பதிவாகியுள்ளது.



## பிரான்சுக்கு சுற்றுலா வருவதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளில் தளர்வுகள்!

வெளிநாட்டினர் பிரான்சுக்கு சுற்றுலா வருவதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளில் தளர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது பிரான்சுக்கு சுற்றுலா வரும் வெளிநாட்டினர் தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களாக இருந்தால் அவர்களுக்கு கொரோனா பரிசோதனை கட்டாயம் இல்லை என பிரான்ஸ் அரசாங்கம் அறிவித்துள்ளது.



இது அவுஸ்ரேலியா, இஸ்ரேல், ஜப்பான், நியூஸிலாந்து சிங்கப்பூர், தென்கொரியா மற்றும் ஐரோப்பிய கூட்டமைப்பின் உறுப்பு நாடுகளில் இருந்து வரும் வெளிநாட்டினருக்கு மட்டுமே பொருந்தும்.

அதேசமயம் கொரோனா பாதிப்பு அதிகமாக உள்ள நாடுகளுக்கு ஏற்கனவே உள்ள கட்டுப்பாடுகள் தொடரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆப்கானிஸ்தானில் கண்ணிவெடிகளை அகற்றிய 10 தொழிலாளர்கள் சுட்டுக்கொலை!

பிரித்தானிய தொண்டு நிறுவனத்தில் பணியாற்றிய பத்து பேர் ஆப்கானிஸ்தானில், சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக ஹலோ டிரஸ்ட் தொண்டு நிறுவனம் மற்றும் ஆப்கானிஸ்தான் உட்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. செவ்வாய்க்கிழமை பிற்பகுதியில் வடக்கு ஆப்கானிஸ் தான் மாகாணமான பாக்லானில் நிகழ்ந்த இச்சம்பவத்தில் 16பேர் காயமடைந்தனர்.



ஆப்கானிஸ்தானின் டோலோ நியூஸ் தளம் பகிர்ந்த காணொளியில், காயமடைந்தவர்களை மாகாண தலைநகர் புல்-இ-கும்ரி மருத்துவமனைக்கு அழைத்து வருவது காட்டப்படுகின்றது. அருகிலுள்ள வயலில் இருந்து கண்ணிவெடிகளை அகற்றிய அடுத்த நாளில், இந்த தாக்குதல் சம்பவம் நடந்துள்ளது.

இஸ்லாமிய அரச குழுவான (ஐ.எஸ் அமைப்பு) தான் இந்த தாக்குதலை நடத்தியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அத்துடன் அரபு மொழி அறிக்கையில், ‘கண்ணிவெடிகளை அகற்றிய தொழிலாளர்கள் சுட்டுக்கொல்லபட்டதாவும் அவர்களின் உபகரணங்களை கைப்பற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மே 1ஆம் திகதியில் இருந்து அமெரிக்கா தனது கடைசி துருப்புக்களை திரும்பப் பெறத் தொடங்கியதில் இருந்து ஆப்கானிஸ்தானில் வன்முறை அதிகரித்துள்ளது. ஆப்கானிஸ்தான் அரசாங்கத்துக்கும் தலிபானுக்கும் இடையிலான சமாதான பேச்சுவார்த்தைகளில் இணக்கம் ஏற்பட்ட நிலையில் சர்வதேச துருப்புக்கள் வெளியேறுவது வந்துள்ளது.

## ஒரே பிரசவத்தில் 10 குழந்தைகளைப் பெற்று உலக சாதனை படைத்த பெண்

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த 37 வயது பெண் ஒரே பிரசவத்தில் 10 குழந்தைகளைப் பெற்றெடுத்து உலக சாதனை படைத்துள்ளார். இதற்கு முன் மாலி நாட்டு பெண் ஒரே பிரசவத்தில் 9 குழந்தைகளைப் பெற்றெடுத்த சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது. ஆபிரிக்க நாடான தென்னாபிரிக்காவைச் சேர்ந்த கோஷியாமி தமாரா சித்தோல் என்ற 37 வயது பெண்ணுக்கு ஏற்கனவே இரட்டைக் குழந்தைகள் உள்ளன. இந்நிலையில் மீண்டும் கர்ப்பம் தரித்திருந்தார்.

7-ஆம் திகதி பிரசவ வலி ஏற்பட்டதையடுத்து பிரிட்டோரியா நகரிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு சிசேரியன் மூலம் 7 ஆண் குழந்தைகள், 3 பெண் குழந்தைகள் என 10 குழந்தைகள் பிறந்தன. தாயும், 10 குழந்தைகளும் நலமாக உள்ளதாகக் கூறப்படுகிறது. இதற்கு முன்னர் மாலி நாட்டைச் ஹலிமா சிசி, என்ற 25 வயது இளம்பெண் கடந்த மே மாதம் ஒரே பிரசவத்தில் ஏழு குழந்தைகளைப் பெற்றெடுத்தார். இது உலக சாதனையாகக் கருதப்பட்டது. தற்போது தென்னாபிரிக்கப் பெண் 10 குழந்தைகளைப் பெற்றெடுத்து ஹலிமா சிசியின் சாதனையை முறியடித்துள்ளார். இதுதான் இப்போது உலக சாதனையாகக் கருதப்படுகிறது.






## கனடாவில் முஸ்லீம் குடும்பத்தின் மீது திட்டமிடப்பட்ட வாகனதாக்குதல் - நால்வர் பலி

கனடாவில் முஸ்லீம் குடும்பமொன்றின் மீது திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட டிரக் தாக்குதலில் அந்த குடும்பத்தை சேர்ந்த நால்வர் கொல்லப்பட்டுள்ளனர். ஒன்டாரியோ மாகாணத்தில் உள்ள லண்டன் நகரில் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

லண்டன் நகரில் பாதசாரிகள் மீது நதனியல் வெல்ட்மன் என்ற 20 வயது நபர் வேண்டுமென்றே மோதியதில் 74 மற்றும் 44வயதுடைய இரு பெண்களும், 46 வயது நபரும் 15 வயது சிறுமியும் கொல்லப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஒன்பது வயது சிறுவன் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளான் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். தாக்குதலை மேற்கொண்டவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் இது திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் இஸ்லாமியர்கள் என்பதால் அவர்கள் இலக்கு வைக்கப்பட்டனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தப்பியோடி இளைஞனை கைது செய்த வேளை அவர் உடற்கவசம் போன்ற ஒன்றை அணிந்திருந்தார்,என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சம்பவத்தை நேரில் பார்த்த பீட்டர் மாட்டின் என்பவர் நான் முதலில் இது மோசமாக வாகனம் செலுத்தியதால் ஏற்பட்ட விபத்து என கருதினேன் என தெரிவித்துள்ளார்.

நான் அருகில் சென்று பார்த்ததும் பொலிஸாரையும் உடல்கள் நிலத்தில் காணப்படுவதையும் பார்த்தேன், அந்த நேர கதறல்களில் இருந்து என்னால் விடுபட முடியவில்லை என அவர் தெரிவித்துள்ளார். நான் எனது மகள் கொல்லப்பட்டவர்களின் உடல்களை பார்க்கமுடியதவாறு அவளை மறைத்துக்கொண்டேன் என ஒருவர் தெரிவித்துள்ளார். 2017ன் பின்னர் கனடாவில் முஸ்லீம்களிற்கு எதிராக இடம்பெற்ற மோசமான சம்பவம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கையால் எழுதப்பட்ட உலகின் மிகப்பெரிய 'பைபிள்'





துபாயில் வசிக்கும் கேரளாவை சேர்ந்த குடும்பத்தினர் கையால் எழுதிய உலகின் மிகப்பெரிய பைபிளை உருவாக்கியுள்ளனர். அந்த பைபிளை துபாயில் உள்ள மார் தோமா தேவாலயத்திற்கு அவர்கள் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

துபாயில் வசித்து வருபவர் மனோஜ் சாமுவேல். இவரது மனைவி சூசன் சாமுவேல். கேரளாவை பூர்வீகமாக கொண்ட இவர்களுக்கு கருண் என்ற மகனும், கிருபா சாரா என்ற மகளும் உள்ளனர்.

இவர்கள் குடும்பத்துடன் சேர்ந்து உலகின் மிகப்பெரிய பைபிள் புத்தகத்தை தயார் செய்துள்ளனர். இதற்காக 5 மாதங்கள் தினமும் 15 மணி நேரம் இந்த பைபிளை உருவாக்க செலவிட்டுள்ளனர்.

முழுவதும் கையால் எழுதப்பட்ட இந்த பைபிள் 1,500 பக்கங்களுக்கு மேல் உள்ளது. மொத்தம் 8 லட்சம் வார்த்தைகள் அதில் பயன்படுத்தப்பட்டுள்ளது. 60 பேனாக்களை இந்த குடும்பத்தினர் பயன்படுத்தி எழுதியுள்ளனர். சாதாரண ஏ-4 அளவுள்ள காகிதத்தை விட 8 மடங்கு பெரிதான ஏ-1 அளவுள்ள காகிதங்களில் இந்த பைபிள் எழுதப்பட்டுள்ளது. தற்போது கின்னஸ் நிறுவனம் இதனை அங்கீகரித்து சான்றிதழ் தர உள்ளது என அந்த குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

துபாய் ஜெபல் அலி பகுதியில் உள்ள மார் தோமா தேவாலயத்தின் 50-வது ஆண்டு நிறைவு கடந்த 2019-ம் ஆண்டு கொண்டாடப்பட்டது. இந்த பொன்விழாவை முன்னிட்டு இதனை அங்கு வழங்குவதாக குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். இந்த பிரதியை அந்த தேவாலயத்தின் போதகர் ரெவரன்ட் ஜினு ஏப்பனிடம் குடும்பத்தினர் வழங்கினர்.

தோலினால் கட்டப்பட்ட இந்த புத்தகத்தை அழகிய வடிவமைப்புடன் கூடிய பிரத்யேக பேழையில் வைத்து அந்த தேவாலயத்திற்கு மனோஜ் சாமுவேல் குடும்பத்துடன் சென்று வழங்கியுள்ளார். தற்போது ஏ-2 அளவில் பைபிள் புத்தகத்தை மலையாள மொழியில் எழுதி வருவதாக மனோஜ் சாமுவேலின் மனைவி சூசன் சாமுவேல் தெரிவித்தார்.

# குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் பிரதி பணிப்பாளராக முதல் பெண் அதிகாரி நியமனம்



சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இமாஷா முத்துமாலா குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள முதல் பெண் பொலிஸ் அதிகாரி இவராவார்.

இந்த நியமனத்திற்கான அனுமதியைப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு வழங்கியுள்ளது.

இமாஷா முத்துமாலா கடந்த 2007 ஆம் ஆண்டும் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி உதவி பொலிஸ் அத்தியட்சகராக பொலிஸ் சேவையில் இணைந்து கொண்டதுடன், அவருக்கு 14 ஆண்டுகள் பொலிஸ் சேவையில் அனுபவமுள்ளது.

உருகுணை பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரியான அவர், திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையிலும் பட்டம் பெற்றுள்ளார். நுகேகொடை பொலிஸ் பிரிவில் குற்றவியல் விசாரணைப் பிரிவிலும் பொலிஸ் நற்சான்று அறிக்கை வழங்கும் பிரிவிலும் கடமையாற்றியுள்ளார்.

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 13.06.2021 அன்று வெளியிடப்பட்டது.